# 03 இருபதாம் நூற்றாண்டில் ஆசிய நாடுகளின் எழுச்சி

இங்கு நாங்கள் இந்தியா, ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் எழுச்சியடைந்த விதம்பற்றிக் கற்போம்.

பிரித்தானியப் பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்த இந்தியா எழுச்சியடைந்து சுதந்திரம் பெற்றமையும் எந்தவொரு அந்நிய ஆட்சிக்கும் நேரடியாக உட்படாத ஜப்பானும் சீனாவும் ஏகாதிபத்திய வாதிகளின் நெருக்குதல்களிலிருந்து விடுபட்டு சுதந்திரமும் தன்னாதிக்கமுள்ள அரசுகளாகத் தலைநிமிர்ந்தமையும் ஆசியாவின் சிறிய நாடான இலங்கைக்கு சிறப்பான எடுத்துக்காட்டுகளாகும்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்டிருந்த நாம் 1948 இல் அதிலிருந்து விடுதலை பெற்றாலும் தேசிய அபிவிருத்தியை இன்னும் எம்மால் அடைய முடியாதுள்ளது. எனவே இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளை வழி காட்டிகளாகக் கொள்வதன் மூலம் எமது இலக்கை எய்தப்பெற முடியுமென்றபடியால் அவைபற்றிக் கற்றறிந்துகொள்வோம்.

## இந்தியா



வாஸ்கொட காமா
படம் 3.1

1498ஆம் ஆண்டு வாஸ்கொட-காமா எனும் போர்த்துக்கேய மாலுமி இந்தியாவின் கள்ளிக் கோட்டையை அடைந்ததும், மேல் நாட்டவருக்கு இந்தியாவுக்கு வரும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆரம்பத்தில் மேல் நாட்டவர் வர்த்தக நோக்குடனேயே இந்தியாவிற்கு வந்தனர். எனினும் நாளடைவில் அவர்கள் அரசியல் விடயங்களிலும் தலையிடத் தொடங்கினர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரான்சியர் ஆகியோர் இந்தியாவின் பல பாகங்களிலும் தமது ஆட்சியை நிறுவினர். 1848ஆம் ஆண்டளவில் இந்தியா முழுவதும் தமது ஆட்சியை நிறுவுவதில் பிரித்தானியர் வெற்றி கண்டனர். இந்தியாவின் இறுதி சுயாதீன அரசான பஞ்சாப், பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் கீழ் வந்ததுடன் பிரித்தானியரது ஆட்சி காஷ்மீர் தொடக்கம் கன்னியாகுமரி வரையிலும் இந்துகுஷ் மலைத் தொடரிலிருந்து அசாம் வரையிலும் பரவியது.

## சிப்பாய்க்கலகம்

இந்தியா முழுவதும் பிரித்தானியரது ஆட்சியின் கீழ் வந்ததும் வர்த்தக சங்கத்திற்கு எதிராக இடையிடையே கிளர்ச்சிகள் ஏற்பட்டன. கி.பி. 1806, 1844, 1849, 1850, 1852 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகள் அடக்கப்பட்டன. 1857 ஆம் ஆண்டு ஏற்பட்ட படைவீரர் கலகம் (சிப்பாய்க் கலகம்) பிரித்தானியருக்கு எதிராக ஏற்பட்ட முக்கிய கலகமாகும். பிரித்தானியப் படையிலிருந்த படைவீரர்கள் (சிப்பாய்கள்) செய்த அந்தக் கிளர்ச்சி தில்லி, லக்னோ, கான்பூர், மத்திய பிரதேஷ், புன்தெல்கான்ட், உரோஹில்கன்ட் ஆகிய இடங்களுக்குப் பரவியது.

1857ஆம் ஆண்டு கலகத்திற்கு அரசியல், பொருளாதார, சமூக, சமய காரணிகள் பின்னணியாய் அமைந்தன. அவை பின்வருமாறு :



தில்லிக் கிளர்ச்சி
படம் 3.2

- ❖ ஆங்கிலேயர் இந்தியாவின் பிரதேசங்களை இணைக்கும் போது வஞ்சகமாக செயற்பட்டமை.
- ❖ இந்தியத் தலைவர்களை மதியாமை.
- ❖ புகையிரதச்சேவை, தந்திச்சேவை, தபால் சேவை என்பன ஆரம்பிக்கப்பட்டமை, இதன் மூலம் பிரதேசங்களுக்கிடையே தொடர்பு ஏற்பட்டமை.



வங்காளத்தில் சிப்பாய்கள்
படம் 3.3

- ❖ பிரித்தானியர் கிறிஸ்தவ மிஷனரிமார்களுக்கு (மறைபரப்பாளர்களுக்கு) உதவி வழங்கியமை.
- ❖ இந்தியாவின் வளங்கள் வெளிநாடுகளைச் சென்றடைந்தமை.
- ❖ இந்தியாவின் தேவைகள் கவனிக்கப்படாமை.
- ❖ ஆப்கானிஸ்தானிலும் ஏனைய பிரித்தானிய குடியேற்றங்களிலும் ஈடுபட்ட போர்களில் சிப்பாய்களை ஈடுபடுத்தியமை.
- ❖ போர் வீரர்களுக்கு வழங்கப்பட்ட தோட்டாக்களில் பன்றியினதும், பசுவினதும் கொழுப்புப் பூசப்பட்டதாக வதந்தி பரவியது. இஸ்லாமியருக்கும், இந்துக்களுக்கும் மத ரீதியாக இது உகந்ததாக இன்மையால் அதனை அவர்கள் புறக்கணித்தனர். எனினும் அவற்றைப் பயன்படுத்தும்படி படைவீரர்கள் வற்புறுத்தப்பட்டனர். இதுவே போருக்கான உடனடியான காரணமாக அமைந்தது.

1857ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி இக் கலகம் மிகவும் கொடூரமாக அடக்கப்பட்டதுடன், அதனை அடக்குவதற்குப் 15 மாதங்கள் வரையில் சென்றன.

## கலகம் தோல்வியுற்றதற்கான காரணங்கள்

- ❖ ஒழுங்கான திட்டமின்மை
- ❖ பொது மக்களின் ஒத்துழைப்பு இன்மை
- ❖ ஒழுங்கான தலைமைத்துவம் இன்மை
- ❖ செல்வமும், படைப் பலமுமுள்ளவர்கள் இந்தக் கலகத்திற்கு ஆதரவு வழங்காமை
- ❖ பொதுக் குறிக்கோள் இல்லாமை
- ❖ பிரித்தானியரிடம் பொருளாதாரம், படைப்பலம் என்பன உயர் நிலையில் காணப்பட்டமை.

இந்தியாவில் கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் ஆட்சி முடிவுற்று, இந்தியா, பிரித்தானியரின் நேரடியான ஆட்சியின் கீழ் வந்தமையே 1857 ஆம் ஆண்டுக் கலகத்தின் முக்கியமான விளைவாகும். கி.பி. 1858 ஆகஸ்ட் 2ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் மூலமே இந்தியா பிரித்தானிய முடியின் கீழ் வந்தது. 1857 ஆம் ஆண்டு ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய நிகழ்வாகும். இந்தியா சுதந்திரம் அடைய வேண்டுமென்ற எண்ணம் இதன் பின்னரே இந்திய மக்களுக்கு ஏற்பட்டது. நாட்டுப்பற்று அதிகரித்த வேளையில் இந்தியர்கள் பல்வேறு பிரதேசங்களில் கிளர்ச்சி செய்தனர்.

1857 ஆம் ஆண்டுக் கலகம் தோல்வியுற்றதன் மூலம், பிரித்தானியருக்கு எதிராகப் போர் செய்வதற்குத் தமக்குப் படைப்பலமும், பொருளாதாரப் பலமும் இல்லையென்பதை இந்திய சுதந்திரப் போருக்கு முன்னின்று உழைத்தோர் உணர்ந்தனர். எனவே பேச்சுவார்த்தை மூலமும், தர்க்க ரீதியாகவும் தமது தேவைகளைப் பிரித்தானிய ஆட்சியாளருக்கு எடுத்துரைப்பதும், குழுவாக இணைந்து செயலாற்றுவதுமே சிறந்தது எனவும் இந்தியர்கள் உணர்ந்தனர். இதனடிப்படையில் படிப்படியாகத் தேசிய இயக்கங்கள் உருவாகின. இந்தியாவில் பிரித்தானியர் கடைப்பிடித்த கொள்கைகள் இந்தியர்களிடையே தேசிய உணர்வு ஏற்படவும் தேசிய ரீதியில் ஒன்றுபடுவதற்கும் வழிவகுத்தன.

## விவசாயம்

அதிகமான நிலவரி விவசாயத்தின் வீழ்ச்சிக்கு வழிகோலியது. இந்த வரியினால் விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டனர். விவசாயம் செய்யாது நிலத்தை வெறுமனே விட்டுவிடும் அளவிற்கு அவர்கள் இருந்தனர். அவ்வாறு செய்தால் பட்டினியால் மடிய நேரிடும். பயிர் செய்தால் அறுவடை அனைத்தையும் வரியாகச் செலுத்த நேரிடும். இதன் காரணமாக சுயதேவைக் கிராமப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.

## கைத்தொழில்

பிரித்தானியர் இந்தியாவின் கைத்தொழில் பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேயிலை, கோப்பிப் பயிர்ச்செய்கை என்பவற்றிற்கு செல்வந்தர்களுக்கு ஊக்கமளித்த பிரித்தானியர், மிகக் குறைந்த சம்பளத்திற்குத் தொழிலாளரை அமர்த்தினர். தொழிலாளரின் ஊழியம் சுரண்டப்பட்டது.

## பஞ்சம்

இந்தியாவில் இடையிடையே ஏற்படும் பஞ்சத்தால் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழக்கின்றனர். இதிலிருந்து மக்களை மீட்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கறுப்புச் சந்தைக்காரர் அதிக விலையில் உணவுப் பொருட்களை விற்றனர். உணவுப் பொருட்களை வாங்க முடியாதோர் பட்டினியால் உயிர் துறந்தனர். ஒருமுறை வங்காளத்தில் ஏற்பட்ட பஞ்சத்தால் 35 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உயிர் துறந்தனர்.

## மேல்நாட்டுக் கல்விமுறை

பிரித்தானியர் மேல்நாட்டுக் கல்விமுறையை அறிமுகம் செய்தது அவர்களது அரசியல், நிர்வாக, பண்பாட்டுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டேயாகும். அவர்களது மேல் நாட்டுக் கல்வி விரிவடைந்தபோது எதிர்பாராத விளைவுகள் ஏற்பட்டன. மேல்நாட்டுக் கல்வியால் ஐரோப்பிய நாடுகளில் நிலவிய ஜனநாயகம் தொடர்பான விளக்கத்தை இந்தியர்கள் பெற்றுக் கொண்டனர். பிரான்சியப் புரட்சியின் தாரக மந்திரமான ‘‘சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்’’ என்பனவற்றை இந்தியர்கள் உள்வாங்கிக் கொண்டனர். ரூசோ, தோமஸ், பேர்ன், கரிபால்டி, வோல்ரேயர், மொண்டஸ்கியு போன்றோரின் தாராண்மைவாதக் கொள்கை இந்திய சமுதாயத்தில் வேரூன்றியது.

ஆங்கிலேயர் தமது அரசனான முதலாம் சார்ள்ஸ், கொடூர ஆட்சியாளனாக இருந்தமையால் அவனைக் கொன்றனர். இரண்டாம் ஜேம்ஸ் அந்தப் பதவிக்குத் தகுதியற்றவனாக இருந்ததால் அவனைப் பதவியிலிருந்து இறக்கினர். அரசர்களைச் சிரச்சேதம் செய்யவும், அவர்களை சிம்மாசனத்திலிருந்து இறக்கவும் ஆங்கிலேயர்களுக்கு உரிமை இருக்குமேயானால் தமக்கும் அந்த உரிமை உண்டென இந்தியர்கள் எண்ணினர்.

பல்வேறு மொழிகளைப் பேசும் இந்தியர்களிடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த ஆங்கிலக் கல்வி உதவியது. கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், தொடர்பினை ஏற்படுத்தவும், ஆங்கில மொழி உதவியது. பிரித்தானியர் தமது ஒரே நிருவாகத்தின் மூலமே இந்தியாவை ஒன்றிணைத்தனர். இது பல்வேறு இனத்தவர்களான இந்தியர்களை ஒரே இனமாக ஒன்றிணையச் செய்ய உதவியது. பிரித்தானியரின் தலைக்கனம், இந்தியர்களைப் புறக்கணித்தல், சட்டத்தின் முன் இந்தியர்கள் சமமாக மதிக்கப்படாமை என்பன பிரித்தானியர் ஆட்சியை மக்கள் வெறுக்கக் காரணமாகின.

பிரித்தானியர் புகையிரதப் பாதைகளையும், பெருந்தெருக்களையும், தபால் சேவைகளையும் ஆரம்பித்தது தமது உற்பத்திப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கேயாகும். எனினும் இது தேசிய உணர்வுக்கு வழிவகுக்கும் எனப் பிரித்தானியர் எண்ணியிருக்கவில்லை. இந்தியர்கள் எவ்வித பண்பாடும் இல்லாதவர்களென்றே பிரித்தானியர் எண்ணியிருந்தனர். இதனால் இந்தியர்களிடம் தன்னம்பிக்கை உணர்வு குறைவுற்றிருந்தது. ஜோன் மார்ஷல், வில்லியம் ஜோன்ஸ், மெக்மூலர், மோத்திமர் உவீலர் போன்ற தொல்பொருள் ஆய்வாளர்கள் இந்தியாவின் ஹரப்பா நாகரிகத்தை வெளிப்படுத்தியதன் மூலம் இந்தியர்களிடையே விழிப்புணர்ச்சி தோன்றியது.

செயற்பாடு

- ❖ இந்தியாவில் பேசப்படும் மொழிகளைக் கொண்ட பட்டியல் ஒன்று தயாரிக்குக.
- ❖ இந்தியாவின் மாநிலங்கள் அடங்கிய தேசப்படம் ஒன்றைத் தயாரிக்குக.

இந்தியாவில் தேசிய உணர்வு வளர்ந்த விதம் பற்றிய அறிவினை நீங்கள் பெற்றிருப்பீர்களென நம்புகிறோம். இப்போது இந்தியாவின் சுதந்திரம் பற்றியும், சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர்கள், நிறுவனங்கள் பற்றியும் எமது கவனத்தைத் திருப்புவோம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் சுதந்திரம் பெறும் நோக்குடன் பல்வேறு அரசியல் அமைப்புக்கள் தோன்றின. அவற்றுள் சுரேந்திரநாத் பானர்ஜி என்பவரால் 1876 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ''கல்கத்தா இந்தியர் சங்கம்'' முக்கியமானதாகும். பிரித்தானியர் மீதிருந்த வெறுப்பை வெளிப்படையாகத் தெரிவித்த முதல் அமைப்பு இதுவாகும். பானர்ஜி நாடு முழுவதும் பிரயாணம் செய்து மக்களுக்குத் தமது சங்கத்தின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தினார். அவரது முக்கிய வேண்டுகோள்கள் மூன்றாகும்.

1 சிவில் சேவைப் பரீட்சையை மீளாய்வு செய்தல்
2 ஆயுதங்கள் சட்டத்தை மறுபரிசீலனை செய்தல்
3 பிரித்தானிய பயிர்ச்செய்கையாளரிடமிருந்து விவசாயிகளைப பாதுகாத்தல்.


டபிள்யூ. சி. பானர்ஜி
படம் 3.4

சுரேந்திரநாத் பானர்ஜியின் பயணங்கள் பெரும் வெற்றியளிக்காததால் அகில இந்திய தேசிய சங்கம் ஒன்றினை அமைப்பதன் அவசியம் முன்வைக்கப்பட்டது. இதன் விளைவாக ஓய்வுபெற்ற பிரித்தானிய ஊழியரான ஆலன் ஒக்டெவியன் ஹியும் என்பவரால் இந்திய தேசிய சங்கம் (Indian National Union) ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு இந்தியாவின் பல பாகங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்தனர். டபிள்யூ. சீ. பானர்ஜி இச்சங்கத்தின் தலைவரானார். இக் கூட்டத்தில் சங்கத்தின் பெயர்

“இந்திய தேசிய காங்கிரஸ்”. (Indian National Congress) என மாற்றப்பட்டது. இந்திய தேசிய காங்கிரசில் வைத்தியர்கள், ஆசிரியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்தோர் அங்கத்துவம் வகித்தனர். ஆனால் பொதுமக்கள் எவரும் அங்கத்துவம் பெற்றிருக்கவில்லை

### இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்கள்

- ❖ இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்களிடையே நாட்டுப் பற்றை ஏற்படுத்தல்.
- ❖ பொதுசன அபிப்பிராயத்தைப் பெறுதல்.
- ❖ இனம், மதம், பிரதேசம், என்பவற்றைக் கருத்தில் கொள்ளாது தேசிய வாதத்தை வளர்த்தல்.
- ❖ பொதுத் தேசிய அபிலாசைகளை பிரித்தானியரிடம் முன்வைத்தல்.

இந்திய தேசியக் காங்கிரசின் வருடாந்தக் கூட்டம் நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் நடைபெற்றன. அவர்கள் அரசிடம் பல்வேறு கோரிக்கைகளை விடுத்தனர். அவைகள் பின்வருமாறு :

- ❖ சிவில் சேவைப் பரீட்சையைப் பிரித்தானியாவிலும், இந்தியாவிலும் ஒரே நேரத்தில் நடாத்துதல்.
- ❖ கல்வியின் பொருட்டு மேலதிக வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- ❖ உயர் பதவிகளுக்கு இந்தியர்களிலிருந்து அதிகமானோரைச் சேர்த்தல்.
- ❖ போர்ச் செலவைக் குறைத்தல்.
- ❖ ஆயுதங்கள் கொண்டு செல்வதற்கான அனுமதி அளித்தல்.

இந்தியத்தேசிய காங்கிரசில் மிதவாதிகளும், தீவிரவாதிகளும் இருந்தனர். முதலில் காங்கிரசில் அதிகாரம் வகித்தவர்கள் மிதவாதிகளாவர் . கலந்துரையாடல், விவாதித்தல், விண்ணப்பங்கள் என்பவற்றின் மூலம் தமது வேண்டுகோளை நிறைவேற்றக்கூடியதாக இருக்குமென அவர்கள் நம்பினார்கள். இந்தக் கொள்கையுடையோர், பிரித்தானியர்கள் இந்தியாவில் இருப்பது நலம் எனக் கருதினார்கள். உடன் கட்டை ஏறுதல், பாலியத் திருமணம், சாதி வேற்றுமை, என்பனவற்றை இல்லாதொழித்தல் என்பன இந்தியாவிற்குப் பெரும் நன்மையே என இவர்கள் கருதினர். பிரித்தானியருக்கும், காங்கிரசிற்கும் இடையே நெருங்கிய உறவு இருந்ததோடு பல தடவைகளில் பிரித்தானியப் பாராளுமன்ற அங்கத்தவரகள் காங்கிரஸ் கூட்டங்களிலும் கலந்து கொண்டனர். எனினும்

தேசிய காங்கிரசின் சில அங்கத்தவர்கள் பிரித்தானியரது ஆட்சியை வெளிப்படையாக விமர்சித்த போது பிரித்தானியருக்கும், தேசிய காங்கிரசிற்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. அதன் பின்னர் பிரித்தானியர் தேசிய காங்கிரசைத் தாழ்த்தி, அதற்குப் பதிலாக வேறு இயக்கத்தை ஆரம்பித்தனர்.

மிதவாதக் கொள்கையுடையோரின் சிறப்பான செயற்பாடுகள் பற்றிப் பல்வேறு எண்ணங்கள் வெளியாகியுள்ளன. அவர்களால் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது போனது என்பது சிலரின் எண்ணமாகும். எவ்வாறெனினும் அவர்கள் கல்விகற்ற இந்தியர்களை ஒரே மேடைக்குக் கொண்டு வந்தமை பெரும் வெற்றியாகும் என்பது எமது கருத்தாகும்.

இந்தியக் காங்கிரசில் பொது மக்கள் அங்கத்துவம் வகிக்காததால் காங்கிரசின் தலைவர்களுக்கும், மக்களுக்கும் இடையே இடைவெளி உருவானது.


செயற்பாடு:

இந்திய தேசிய காங்கிரசின் நோக்கங்களை பட்டியற்படுத்துக.

பலவித விமர்சனங்களுக்கு மத்தியிலும் மிதவாதிகள் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியீட்டினர். அவர்கள் பிரித்தானியரைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றவில்லை. அவர்கள் பொறுமையை இழக்கவில்லை. பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த இந்திய அரசியலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது அவர்களாலேயேயாகும். அது மட்டுமன்றி இந்தியர்களின் இதயங்களில் ஜனநாயகம், சிவில் உரிமை போன்ற எண்ணங்களும் கூட உதயமாகியது இவர்கள் மூலமேயாகும்.

இப்போது நாம் இந்திய தேசிய காங்கிரசின் தலைவர்கள் சிலரைப் பற்றி அறிந்து கொள்வோம்.

## ததாபாய் நபரோஜி


ததாபாய் நபரோஜி
படம் 3.5

"இந்தியாவின் மேன்மையாளர்" என அழைக்கப்படும் இவர் இந்திய தேசிய சங்கத்தின் ஆரம்ப உறுப்பினராவார். பிரித்தானியரால் இந்தியாவில் நடைபெற்ற சுரண்டல், அநீதி என்பவற்றைப் பிரித்தானிய ஆட்சியாளருக்கு அறிவிக்கும் பொருட்டு இங்கிலாந்தில் தங்கினார். பிரித்தானிய லிபரல் கட்சியின் உறுப்பினரான இவர், பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு அவர் இந்தியர்களுக்காகத் தமது போராட்டத்தை நடத்தினார்.

## கோபால் கிருஷ்ண கோகலே

1856ஆம் ஆண்டு மகாராஷ்டிரத்தில் பிறந்த இவர் ஆசிரியராகக் கடமையாற்றிய பின் பெர்குசன் கல்லூரியின் அதிபரானார். பிரித்தானிய ஆளுநரின் சட்ட சபையில் உறுப்பினராகி, ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்க சட்டமொன்றைக் கொண்டு வந்தார்.



கோபால் கிருஸ்ண கோகலே

## சுரேந்திரநாத் பனர்ஜி

இந்திய தேசிய சங்கத்தின் தந்தையென இவர் குறிப்பிடப்படுகின்றார். வங்காளம் எனும் பத்திரிகையின் ஆசிரியரான இவர், ரிப்பன் கல்லூரியின் ஆரம்ப கர்த்தாவுமாவார். இந்திய தேசிய சங்கத்தின் தலைவராக இரு முறை தெரிவு செய்யப்பட்டார்.

செயற்பாடு :
இந்தியத் தேசிய காங்கிரசுடன் தொடர்புடைய வேறு நபர்களைப் பற்றிய விபரம் அடங்கிய கைநூல் ஒன்று தயாரிக்குக.

**இந்திய தேசிய காங்கிரசின் தலைவர்கள் பற்றி அறிவோம்.**

மிதவாதக் கொள்கையுடையோர் பலவீனமடைந்தபோது தீவிரவாதத் தலைவர்கள் தோன்றினர். தீவிரவாதத் தலைவர்கள் சில வெற்றிகளையீட்டினர். அவைகளில் கீழே தொகுக்கப்பட்டுள்ளவை சிலவாகும்.

❖ சுதந்திரப் போராட்டத்தில் பொது மக்களை இணைத்தமை, கல்விமான்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் போன்றோரை சுதந்திரப் போராட்டத்தில் சேர்த்துக் கொண்டமை.

❖ டொமினீயன் அந்தஸ்து அல்ல பூரண சுதந்திரத்தின் பொருட்டுப் போராட்டம் நடத்தியமை

❖ வெளிநாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தப்படாமை.

❖ வேலை நிறுத்தத்தின் மூலம் பிரித்தானியப் பொருளாதாரத்தை வீழ்ச்சியுறச் செய்தமை

❖ பத்திரிகைகளின் மூலம் மக்கள் கருத்துக்களை வெளியிட்டமை.

இப்போது இந்திய தேசிய காங்கிரசின் போராட்டத் தலைவர்களைப் பற்றிப் படிப்போம்.

## பால கங்காதர திலகர் (1856 - 1920)

மகாராஷ்டிரத்தில் பிறந்த இவர், தொழிலில் ஒரு வழக்கறிஞர். இந்தியாவில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்குக் கல்வி முக்கிய ஊடகமாக உள்ளது என்பதனை நம்பினார். ''கேஷரி'' , ''மருத'' எனும் பத்திரிகைகளை ஆரம்பித்தார். ''உலக அபிமானி'' எனும் பெயரிலும் அழைக்கப்பட்டார்.

## பிபின்சந்திரபோல் (1858 - 1932)

அஸாமில் பிறந்த இவர் 1887 ஆம் ஆண்டு இந்திய தேசிய சங்கத்தில் சேர்ந்த அவர், இந்தியாவின் பூரண சுதந்திரத்திற்காகப் பாடுபட வேண்டுமெனக் கூறினார்.

## லாலா லஜ்பதிராய் (1865 - 1928)



லாலா லஜ்பதி ராய்
படம் 3.7

பஞ்சாபில் பிறந்த இவர் ஒரு வழக்கறிஞர். 1888ஆம் ஆண்டு தேசிய சங்கத்தில் இணைந்தார். பிரித்தானிய அரசுக்கு விண்ணப்பங்கள் அனுப்புவது பயனற்றது என்பதை உணர்ந்த இவர் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக செயற்பட வேண்டுமென எடுத்துக் காட்டினார்.

## 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்திய தேசிய காங்கிரஸ்

இந்திய தேசிய சங்கத்தில் தீவிரவாதிகளுக்கும், மிதவாதிகளுக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடுகளின் காரணமாக 1907ஆம் ஆண்டு இந்திய தேசிய சங்கம் இரண்டாகப் பிரிந்தது. மிதவாதிகள் டொமினீயன் நிலையில் சுதந்திரம் வேண்டி நின்ற வேளையில், தீவிரவாதிகள் பூரண சுதந்திரத்தை வேண்டி நின்றனர். இக்கருத்து வேறுபாடே இந்திய தேசிய சங்கம் இரண்டாகப் பிளவுபடக் காரணமாக அமைந்தது. பிரித்தானியர் தமது குடியேற்ற நாடுகளில் பிரித்தாளும் கொள்கைகளை (Divide & Rule)க் கடைப்பிடித்தனர். சாதி, சமய, இன, மொழி வேற்றுமைகள் இருக்கும் போது தமது ஆட்சியை எளிதாகக் கொண்டு செல்லலாம் என அவர்கள் எண்ணினர். இந்து - முஸ்லிம்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் பொருட்டு 1906 ஆம் ஆண்டு

வங்காளம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பரந்த நிலப்பரப்பையுடைய வங்காளப் பிரதேசத்தை ஆட்சி செய்வது கடினமானது என்பதனாலேயே அது இரண்டாகப் பிரிக்கப்பட்டதாக ஹர்சன் பிரபு கூறினார்.

தேசிய இயக்கம் பலம் வாய்ந்த ஓர் இயக்கமாக எழுச்சியடைந்து வருவதைக் கண்ட பிரித்தானியர் அந்த இயக்கத்தைத் துண்டாட முயன்றனர். சிறுபான்மையினரான முஸ்லிம்களைத் தம் பக்கம் திருப்புவதற்காக 1906 ஆம் ஆண்டு முஸ்லிம்களைக் கொண்டு முஸ்லிம் லீக் (Muslim League) கட்சியை நிறுவினர். ஆனால் முஸ்லிம் லீக்கின் மூத்த தலைவரான சேர் சாஹிட் சன்ந் மக்களை இஸ்லாமியருக்கோ இந்துக்களுக்கோ பக்கம் சாராமல் பிரித்தானியருக்கே தார்மீக ஆதரவை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

## தேசிய இயக்கமும், மகாத்மா காந்தியும்.

மோகனதாஸ் கரம்சந்த் காந்தி குஜராத் பிரதேசத்தில் 2.10.1869 ஆம் ஆண்டு பிறந்தார். இந்தியாவில் கல்வி பயின்ற இவர், இங்கிலாந்திற்குப் பரிஸ்டர் பட்டம் பெறும் பொருட்டுச் சென்றார். தனது கல்வியை நிறைவு செய்த பின்னர், தன் தொழிலின் பொருட்டுத் தென்னாபிரிக்காவுக்குச் சென்றார். அங்கு சுதேசிகளைப் பிரித்தானியர் நடத்தும் விதத்தைக் கண்ட காந்தி, ஆச்சரியத்துக்குள்ளானார். சுதேசிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு சத்தியாக்கிரகம் எனும் நடவடிக்கையை ஆரம்பித்தார். பொது மக்களின் சிவில் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இயக்கம் ஒன்றினை ஆரம்பிக்கும் நோக்குடன் காந்தி 1915 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார்.


மகாத்மா காந்தி
படம் 3.8

இந்தியாவுக்கு வந்த காந்தி பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் தொழிலாளராகப் பணிபுரிவதன் பொருட்டுப் பெறப்பட்ட உறுதிச் சீட்டை ரத்துச் செய்யும்படி சத்தியாக்கிரகம் ஒன்றினை மேற்கொண்டார். அதன் பின்னர் அந்தக் கோரிக்கைகளுக்குப் பிரிதானியர் இணங்கினர். வங்காளத்தில் சம்பா பிரதேசத்தில் இண்டிகோ அவுரி (துணிகளுக்கு சாயமூட்டப் பயன்படும் ஒருவகைப் பயிர்) பயிரிடுவோரின் பிரச்சினையைத் தீர்த்ததும் சத்தியாக்கிரகத்தின் மூலமேயாகும். இவ்வாறு காந்தி ஏழை மக்களின் விடுதலைக்காகப் போராடினார்.

மகாத்மா காந்தி இந்திய தேசிய காங்கிரசின் உதவியுடன் ஒத்துழையாமை இயக்கத்தை (1920 - 1922) ஆரம்பித்தார். நீதிமன்றம், சட்ட மன்றம், கல்வி நிறுவனங்கள் என்பனவற்றையும், பிரித்தானியப் பொருட்களையும் பகிஷ்கரிக்கவும், பிரித்தானியரால் வழங்கப்பட்ட பதவிகள், பட்டங்கள் என்பனவற்றைத் துறக்கவும், மக்கள் அறிவுறுத்தப்பட்டனர். இந்த இயக்கம் நாடு முழுவதும் விரைவில் பரவியது. இந்த இயக்கத்தில் தேசிய பொருட்களின் பாவனை, சாதிமுறையை

ஒழித்தல், இந்து - முஸ்லிம் ஒற்றுமை என்பன முக்கிய இடம் பெற்றன. இந்த இயக்கத்தின் செயற்பாட்டின் காரணமாகப் பிரித்தானியரின் நிர்வாகம் முற்றிலும் சீர்குலைந்தது. மிகவும் இக்கட்டான நிலைமையை எதிர்நோக்கிய பிரித்தானியர், பிரச்சினையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மலபார் பிரதேசத்தில் ஆரம்பமான சொப்ளார்களின் கிளர்ச்சி, பஞ்சாபின் அத்தாலி இயக்கம் என்பவற்றினால் பிரித்தானியரின் நிலை மேலும் மோசமானது. இந்த இயக்கத்திலுள்ள ஒரு குழுவினர் உத்தர பிரதேசத்தில் பொலிசார் சிலரைக் கொன்றதால், வேதனை அடைந்த காந்தி, அந்த இயக்கத்தை இடைநிறுத்தினார் இதனால் மனமுடைந்த மோதிலால் நேருவும், S. M. தாஸ் ஆகியோரும் காந்தியை விட்டுச் சென்று சுயராஜ்ய கட்சியை ஆரம்பித்தனர்.

1921 ஆம் ஆண்டு இந்திய சட்டத்தின்படி நடத்தப்பட்ட தேர்தலில் சுயராஜ்யக் கட்சி சில இடங்களை வென்றது. அரசினுள் நுழைந்து யாப்பினைக் குழப்பிவிடுவதே அவர்களது நோக்கமாக இருந்தது. இன, மொழி பேதங்கள் மீண்டும் தலைதூக்கியதால் தேசிய காங்கிரஸ் இந்த சட்டத்தை விரும்பவில்லை. 1921 ஆம் ஆண்டு சட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட அரசியல் யாப்புத் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு 1927 ஆம் ஆண்டு சைமன் ஆணைக்குழு இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது. இந்தக் குழுவில் இந்தியர்கள் அங்கத்துவம் வகிக்காதபடியால் தேசிய காங்கிரஸ், ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க முன்வரவில்லை. போராட்டத்தின் மத்தியிலும் சைமன் ஆணைக்குழு தம் அறிக்கையை 1930 ஆம் ஆண்டு அரசுக்குச் சமர்ப்பித்தது. எவ்வாறெனினும் அந்த அறிக்கையால் எவ்வித பயனும் ஏற்படவில்லை.


மகாத்மாகாந்தியின் அடுத்த செயற்பாடாக அமைந்தது சிவில் சட்டத்தை மீறுவதாகும். மகாத்மா காந்தியின் சிவில் சட்டத்தை மீறும் இயக்கம் பாதயாத்திரையின் மூலமே ஆரம்பமானது. உப்பு வரி தொடர்பான சட்டத்தை மீறும் பொருட்டு சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து தண்டி கடற்கரை வரை சென்ற இந்தப் பாத யாத்திரையானது அனைத்து இந்தியர்களதும் இதயங்களைக் கவர்ந்த ஒன்றாக அமைந்தது. நாடு முழுவதும் இவ்வாறான பாத யாத்திரைகள் ஒழுங்கு செய்யப்பட்டன. காந்தி உட்படப் பலர் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்தியக் காங்கிரஸ் கலந்து கொள்ளாததால் சட்டம் தொடர்பான முதலாவது வட்டமேசை மகாநாடு தோல்வியடைந்தது. சிறையில் இருந்து மகாத்மா காந்தியை அழைத்து வந்த ஆளுநர் இர்வின், மகாத்மா காந்தியுடன் இணக்கத்திற்கு வந்தார். அதன்படி சிறையில் இருந்த அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். மக்களின் எதிர்ப்புகளுக்கு உள்ளான யாப்பின் சில பகுதிகள் நீக்கப்பட்டன. அதற்குப் பதிலாகக் காந்தி சிவில் சட்டத்தை மீறும் செயலை இடை நிறுத்தினார். சட்டம் தொடர்பான இரண்டாவது வட்டமேசை மகாநாட்டுக்கு காந்தி அழைக்கப்பட்டார். மகாநாட்டில் கலந்து கொண்ட காந்தி, இந்தியாவுக்குப் பூரணமான சுதந்திரத்தைப் பிரித்தானியர் வழங்கமாட்டார்கள் என்ற எண்ணத்துடனேயே இந்தியாவுக்குத் திரும்பினார். சாதி ரீதியாகத் தொகுதிகள்

ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினால் மூன்றாவது வட்டமேசை மகாநாடும் தோல்வியடைந்தது. தோல்வியடைந்த வட்டமேசை மகாநாட்டை அடிப்படையாகக் கொண்டு 1935ம் ஆண்டு இந்தியச் சட்டம் அமைக்கப்பட்டது.

1935 இந்திய அரசியல் யாப்பின் மூலம் சமஷ்டி ஆட்சி முறையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட பொழுதிலும், யாப்பினை ஒழுங்கமைத்த முறையில் இந்தியத் தேசிய காங்கிரஸ் திருப்தி கொள்ளவில்லை.

இந்தியாவில் முஸ்லிம்களுக்குத் தனியான இராச்சியம் தேவை என்ற கருத்தை ஏற்ற முகம்மது அலி ஜின்னா உடனே இது தொடர்பாக செயற்பட்டார். அவர் முஸ்லிம்களுக்கெனத் தனியான நாடு வேண்டுமெனக் கேட்டார். அந்த நாட்டில் பஞ்சாப், வட மேற்கு எல்லைப் பிரதேசம், காஷ்மீர், சிந்து, பலுச்சிஸ்தான் முதலிய பிரதேசங்கள் அடங்கின. இந்தக் கருத்தை முதன் முதல் வெளிப்படுத்தியவர் மொகமட் அல்லாமா இக்பால் எனும் கவிஞராவார்.



முகம்மது அலி ஜின்னா
படம் 1.9

இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாகும் போது இந்தியா பிரித்தானியருக்கு சார்பாக உள்ளது என இந்திய ஆளுநர் கூறிய கூற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்திய காங்கிரஸ் அமைச்சரவையின் அமைச்சர்கள் பதவி விலகினர். இந்தியர்களது பிரச்சினையை விரைவில் தீர்க்கும் பொருட்டு, அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் சிலவற்றுடன் சேர் ஸ்டெபர்ட் கிரிப்ஸ் என்பவர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார். யுத்தத்தின் பின்னர் செயற்படுத்தும், நோக்குடன் அமைந்த இந்த யாப்பினை ''எதிர்காலத் திகதி குறிப்பிடப்பட்ட காசோலை'' எனக் காந்தி கூறினார். கிரிப்சின் ஆலோசனையை இந்திய தேசிய சங்கமும், முஸ்லிம் லீக்கும் ஏற்றுக் கொள்ளவில்லை. முஸ்லிம் லீக் பாக்கிஸ்தான் எனும் பெயரில் தனிநாடு கோரியது.

இந்த நிலையில் பிரித்தானியரை இந்தியாவில் இருந்து வெளியேற்றும் பொருட்டு ''வெள்ளையனே வெளியேறு'' எனும் இயக்கம் காந்தியால் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே மகாத்மா காந்தியின் முக்கிய இயக்கமாக இருந்தது.

முஸ்லிம்கள் தொடர்பாக சீ. இராஜகோபாலாச்சாரியாரின் திட்டத்தைப் பின்பற்றும்படி, காந்தி முகம்மது அலி ஜின்னாவைக் கேட்டுக் கொண்டார். ஆனால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. தமது திட்டத்தின்படி பாக்கிஸ்தான் எனும் நாட்டை உருவாக்குவதே முகம்மது அலி ஜின்னாவின் எண்ணமாக இருந்தது. இந்திய தேசிய காங்கிரசிற்கும், முஸ்லிம் லீக்கிற்கும் இடையே இணக்கத்தை ஏற்படுத்த ''சிம்லா மகாநாடு'' ஒழுங்கு செய்யப்பட்டது. அது முற்றிலும் தோல்வி கண்டது.

இந்திய சுதந்திரப் போர் பற்றிக் குறிப்பிடும் போது சுபாஷ் சந்திரபோஸ் பற்றிக் குறிப்பிடாது விட முடியாது. இந்திய தபால் சேவையில் இருந்த அவர், அதிலிருந்து விலகி, இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்தார். கருத்து வேறுபாட்டினால் அதிலிருந்து விலகி "முன்னேற்றக் கட்சி" எனும் கட்சியை ஆரம்பித்தார். பிரித்தானியருக்கு எதிராக இரகசியமாகச் செயற்பட்டாலும், அது பிரித்தானியருக்குத் தெரியவரவே நாட்டை விட்டுச் சென்றார். பிரித்தானி-யரிடமிருந்து ஜப்பானியர் கைப்பற்றிய பர்மா, மலாயா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள இந்தியர்களைக் கொண்ட படை ஒன்றைத் திரட்டினார். அந்தப் படையைக் கொண்டு மைசூர், பெஷாவார் ஆகிய பிரதேசங்களை ஆக்கிரமித்து, அப்பிரதேசஙகளில் 10,000 சதுர மைல்களைக் கைப்பற்றினார். எனினும் பின்னர் பிரித்தானியரால் தோற்கடிக்கப்பட்டார். இவர் விமான விபத்தில் உயிர் துறந்தார்.

இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்பதாக உறுதியளித்த தொழிற்கட்சி இங்கிலாந்தில் ஆட்சிக்கு வரவே, 1946 ஆம் ஆண்டு இந்தியர்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு மந்திரிசபை (கபினட்) தூதுக்குழு ஒன்று இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது.

பாகிஸ்தான் என்றொரு நாட்டினை அமைப்பது பற்றிய யோசனை நிராகரிக்கப்பட்டது. பிரித்தானியர்களிடமும், அரச குமாரர்களிடமும் இருந்த பிரதேசங்களை ஒன்றிணைத்து ஒரே இந்திய நாட்டைக் கட்டியெழுப்பிப் பிராந்தியங்களுக்கு சுய ஆட்சியைக் கொடுக்க வேண்டுமென்ற யோசனை முன் வைக்கப்பட்டது. பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள், போக்குவரத்து, வருமானம் தொடர்பான செயற்பாடுகள் மத்திய அரசிடம் இருந்தன. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தற்காலிகமான அரசாங்கம் தேவைப்பட்டது. தற்காலிக அரசை அமைக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அரசில் அமைச்சர் பதவியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு முஸ்லிம் லீக்கிற்கும் அழைப்பு விடுக்கப்பட்ட பொழுதிலும் அவர்கள் அதனை நிராகரித்தனர். இதனால் இந்தியா முழுவதும் இனக்கலவரம் ஏற்பட்டது. 1948 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனப் பிரதமர் கிளமென்ட் ஆர்ட்லி கூறினார். அவர் இந்தியாவின் ஆளுனராக மவுண்ட் பேட்டன் பிரபுவை நியமித்தார். இந்தியாவின் அரசியல் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக அவர் திட்டமொன்றை முன் வைத்தார். முகமது அலி ஜின்னாவின் செயலினால் இந்தியா இரண்டாகப் பிளவுபட வேண்டிய நிலையில் உள்ளது என மவுண்ட்பேட்டன் பிரபு கூறினார். அதன்படி இந்தியா 15.08.1947 இல் சுதந்திரமடைந்தது. 14.08.1947 இல் பாக்கிஸ்தான் உதயமாகியது. 26.01.1950 முதல் இந்தியாவின் புதிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்தது. அது முதல் இந்தியா பூரண சுதந்திரமுடைய ஜனநாயக அரசு என்ற நிலையைப் பெற்றது.

# ஜப்பான்

இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கம் தொடர்பாகப் போதிய விளக்கத்தைப் பெற்றுக் கொண்ட உங்களுடைய கவனத்தை அடுத்து செலுத்த வேண்டியது ஜப்பான் நவீன இராச்சியம் ஒன்றாக மாற்றமடைந்த வரலாற்று விடயங்களை அறிந்து கொள்வதிலாகும்.

## டொகுகாவா ஷோகுநேற்றுகளின் கீழ் ஜப்பான்

ஜப்பானின் மானிய முறையின் குழப்பகரமான காலகட்டம் 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் முற்றுப் பெற்றது. பல நூற்றாண்டுகளாக நிலவிய மானிய முறை யுத்தங்கள், ஒரு தலைமுறைக் காலத்தில் தோன்றிய மூன்று வீரர்களால் வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அவர்களுடைய செயற்பாடுகள் இரத்தம் சிந்துதல், ஈவிரக்கமில்லாத் தன்மை, துரோகம் என்பவற்றால் நிரம்பப்பெற்றதாக இருந்தாலும் ஜப்பானின் முன்னேற்றத்திற்கு அவர்களின் பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாய் இருந்தது.

- ❖ நொபுனகா : கியோடோ பிரதேசத்தைக் கைப்பற்றிக் கொண்டு அங்கிருந்த ஆட்சியாளனைத் துரத்தியடித்தான். பௌத்த கோவில்களை அழித்து அதன் பிக்குகள் ஆயிரக்கணக்கானோரை கொன்று ஒழித்தான். பெண்கள், பிள்ளைகளையும் ஆயிரக்கணக்கில் கொலை செய்வித்தான். 1583 இல் இவன் யுத்த களத்திலேயே மரணித்தான்.
- ❖ ஹிதேயோஷி : நொபுனகாவின் படைத் தலைவர்களில் ஒருவனான இவன் ஜப்பானிய வரலாற்றின் சிரேஷ்ட மனிதனாக மதிக்கப்படுகிறான். உயர்ந்த அறிவுத்திறன், சரியான தீர்மானத்தை மேற்கொள்ளும் ஆற்றல் என்பனவற்றைக் கொண்டிருந்த அவன் சிறந்த அதிகாரியாவான். ஜப்பானிய இராணுவத்தின் அடிமட்டத்தில் இருந்து ஆட்சியாளன் வரை உயர்ந்த ஒரே நபர் இவனாவான்.
- ❖ டொகுகாவா இயா ஷூ : இவன் நொபுனகாவின் கிளர்ச்சிக்காரர்களுடன் சண்டையிட்டு அவர்களை அடக்கி 1603 இல் ஜப்பானின் ஆட்சியாளனாக மாறினான். முன்னைய இரு தலைவர்களாலும் ஆற்றப்பட்ட பணிகளிலிருந்து பலனை அனுபவித்தவன் இவனாவான்.

டொகுகாவா காலகட்டத்தில் (1603 - 1867) ஜப்பானின் மானியமுறை ஆட்சியமைப்பு தொடர்ச்சியாக இருந்து வந்தது. இம்முறை அரசுக்குக் கட்டுப்பட்ட ஓரமைப்பாக இக்காலகட்டத்தில் மாற்றியமைக்கப்பட்டது. இயா ஷு, தனது தலைநகரமாக ஈடோ (டோக்கியோ) வைத் தேர்ந்தெடுத்தான். பாதுகாப்புக்காக நீர் அகழியால் சூழப்பட்ட சக்திவாய்ந்த கோட்டை ஒன்றைக் கட்டியெழுப்பினான். பலம் மிக்க மத்திய அரசைப் பாதுகாப்பதற்காக முழுநாட்டிலும் பரந்துபட்டுச் செயற்படும் வண்ணம் இரகசிய பாதுகாப்புச் சேவை ஒன்றை உருவாக்கினான். மத்திய அரசுக்கு எதிரான சகல செயற்பாடுகளையும் குறிப்பாக பலாத்கார நடவடிக்கைகள் பற்றியும் இதன் மூலம் தகவல்களைப் பெற்றுக் கொண்டான். இரண்டரை நூற்றாண்டுகளாகத் திகழ்ந்த சிறந்த ஆட்சிக்கான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தியவர்கள் ஷோகுன்களே.

## டொகுகாவா ஷோகுன்களின் கீழ் ஆட்சி

ஜப்பானிய அரசாங்கம் இரண்டு அமைப்புகளின் அடிப்படையிலேயே செயற்பட்டது. அதில் ஒன்று ஜப்பானிய அரச குடும்பமாகும். மற்றையது கியோடோ பிரபுக்களின் சபையாகும். அதிகார மையமான ஈடோவில் ஷோகுன்களே காணப்பட்டனர். இவர்கள், இறைவனின் ஏற்பாட்டுக்கமைய தாம் நாட்டை ஆள்வதாகக் கூறினர். ஆட்சியாளரின் தூய்மையால் அவர்களுக்கு எந்தவொரு அநியாயத்தையும் செய்ய முடியாது என்ற அபிப்பிராயத்தை நாடெங்கும் பரப்புவதற்கு முயற்சித்தனர்.

டொகுகாவா ஆட்சியின் ஆரம்ப காலத்தில் அதாவது 17 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரும் ஸ்பானியரும் குறிப்பிடத்தக்க அளவில் ஜப்பானுடன் வர்த்தகத்தை மேற்கொண்டு வந்தனர். 17 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தரும் பின்னர் பிரித்தானியரும் இவ்வர்த்தகத்துடன் தொடர்புபட்டனர். ஜப்பானியர்களால், ஐரோப்பியர்கள் பேரார்வத்துடன் வரவேற்கப்பட்டமைக்கு, அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பல விடயங்கள் காணப்பட்டமையே காரணமாகும். சுடு படைக் கலங்களைத் தயாரிப்பதை ஜப்பானியர், போர்த்துக்கேயரிடமிருந்து கற்றுக் கொண்டு 16 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் அவற்றை உற்பத்தி செய்து யுத்தங்களில் பயன்படுத்தத் தொடங்கினர். இவ்வாயுதங்களுக்கான வெடிமருந்தைத் தயாரிக்கும் திறமையையும் ஜப்பானியர் பெற்றுக் கொண்டனர்.

## டொகுவாக்களின் கீழ் மிஷனரி செயற்பாடு

ஐரோப்பிய வர்த்தகர்களின் பின் வந்தவர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் மிஷனரிகளேயாவர். ஜப்பானியர்கள் இவர்களை அவ்வளவாக விரும்பவில்லை. போர்த்துக்கேய இயேசு சபைக் குருமார்களினதும், ஸ்பானிய பிரான்சிஸ்கன் சபைக் குருமார்களினதும் அர்ப்பணிப்பான பணியால், ஜப்பானின் அனைத்துத் தரப்பு மக்களிலிருந்தும் கத்தோலிக்க சமயத்தைத் தழுவியோர் காணப்பட்டனர் ஜப்பானின் தெற்கு, மேற்கு வர்த்தக நிலையங்களைச் சூழ வாழ்ந்த சுமார் மூன்று இலட்சம் பேர் உரோமன் கத்தோலிக்கத்தைத் தழுவியமையால்

அச்சமயத்தைத் தடை செய்ய வேண்டும் என ஆட்சியாளர் கருதினர். புதிய சமயத்தால், தமது கலாசாரத்திற்குத் தீங்கு விளையுமென்றும் நாடு இரண்டுபடுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் கருதிய ஷோகுன்கள் முதலில் கிறிஸ்தவத்தைத் தழுவியவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மிஷனரிகள், மதம் பரப்புதலைத் தொடர்ந்தும் மேற்கொண்டனர். இதனால் மிஷனரிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கையை மேற்கொண்ட ஷோகுன்கள், பெருந்தொகையான மிஷனரிமார்களைக் கொலை செய்தனர். இதனை எதிர்த்து கிறிஸ்தவ சமயத்தவர் அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். ஷோகுன்கள், அவர்களை முற்றாகக் கொன்றொழித்தனர். அதன் மூலம் கிறிஸ்தவ சமயத்தை ஜப்பானிலிருந்து முற்றாகத் துடைத்தெறிந்தனர்.

## டொகுவாக்களின் காலத்தில் ஐரோப்பாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவு

கிறிஸ்தவர்கள் கடுமையாக அடக்கியொடுக்கப்பட்ட பின்னர், அனைத்து ஐரோப்பியர்களுக்கும் ஜப்பானில் பிரவேசிப்பதற்குத் தடைவிதித்தனர். ஒல்லாந்தர்கள் அரசியல் ரீதியாக ஆபத்தானவர்கள் அல்லர் எனக் கருதிய ஷோகுன்கள், அவர்களுக்கு மட்டும் வருடத்திற்கு ஒரு கப்பல் தனது துறைமுகத்திற்கு வர அனுமதி வழங்கினர். தமது பலத்தை ஐரோப்பியர்களுக்குக் காண்பிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாக ஷோகுன்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டனர். அத்தோடு ஜப்பானியர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் அனைத்திற்கும் தடை விதித்தனர். தடையை மீறியோர்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதித்தனர். ஜப்பானிய கடல் எல்லைக்கு அப்பால் செல்லத்தக்க பாரிய கப்பல்கள் கட்டுதலுக்கும் தடை விதித்தனர். அப்படியிருந்த போதிலும் சீனாவுடன் முன்பு போலவே தொடர்பை மேற்கொண்டு வந்தனர். ஷோகுன்களின் இவ்வாறான கொள்கைகளாலும் செயற்பாடுகளாலும் ஜப்பான் தனிமைப்படுத்தப்பட்ட நாடொன்றாக மாறியது.

டொகுகாவா யுகம், ஜப்பானுக்கு நீண்ட கால சமாதானத்தைப் பெற்றுக் கொடுத்ததோடு நிர்வாகமும் முறைமைப்படுத்தப்பட்டது.

## டொகுகாவாக்களின் கால முன்னேற்றம்

பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜப்பானின் சனத்தொகை முப்பது மில்லியன் அளவில் இருந்தது. ஜப்பானியரிடையே குடும்பக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் பிறப்பு வீதம் குறைவாக இருந்தமை இதற்கான காரணமாக இருந்திருக்கலாம். முழுமையாகப் பார்க்கும்போது, நாடு தன்னிறைவுடன் காணப்பட்டது. வெளிநாட்டு வியாபாரம் துண்டிக்கப்பட்டிருந்த நிலையிலும். கைத்தொழில், உள்நாட்டு வியாபாரம், என்பன பரந்துபட்ட அளவில் வளர்ச்சியடைந்து வந்தது. தொலைத்தொடர்பு, வீதித் தொகுதி, நீர்வழிகள், நாடெங்கும் பரந்து காணப்பட்டன. கைத்தொழில், விவசாய உற்பத்திகள்

வேகமாகப் பரிமாறப்படுதல், முதலாளித்துவப் பொருளாதார முறை வளர்ச்சியடைவதற்கு காரணமாக இருந்தது. அரிசி வியாபாரிகள் பணக்காரரிடையே முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தனர். அவர்கள் தமது நிறுவனத்திலிருந்து அரிசியின் விலையை நாளாந்தம் அறிவிப்பது, வணிக நடவடிக்கைகளுக்காகக் கடன் கொடுப்பது என்பவை நவீன பங்குச் சந்தையை நினைவுபடுத்தத்தக்கதாய் இருந்தது. நாட்டின் மத்திய பகுதியில் நகரங்கள் பெருகின. 18 ஆம் நூற்றாண்டின் முடிவில் ஒரு மில்லியன் சனத்தொகையைக் கொண்டிருந்த டோக்கியோ அக்கால உலகின் மிகப்பெருநகராகத் திகழ்ந்தது.

## சமூக நிலை

டொகுகாவா ஷோகுன்களின் கீழ் ஜப்பானிய சமூகம் பெருமாற்றங்களுக்கு உள்ளானது. ஐரோப்பாவில் மானிய முறைக்காலத்தில் தளபதிகள் போன்று செயற்பட்ட நைட்டுகளின் நிலையை ஜப்பானில் சாமுராய்கள் வகித்து வந்தனர். அக்காலத்தில் சாமுராய்களுக்கு யுத்த சேவையை வழங்கிய படைப்பிராதானிகளான டைமியோக்களின் பரம்பரையைச் சேர்ந்த டொகுகாவா ஷோகுன்களின் ஆட்சியில், சாமுராய்கள் முக்கியத்துவமற்ற ஒரு பிரிவினராக மாறினர். சமூகத்தில் உயர் நிலையில் இருந்த சாமுராய்கள் கீழ் நிலைக்குத் தள்ளப்பட்ட அதே வேளையில், கீழ் நிலையிலிருந்த டைமியோக்கள் ஆட்சியாளர்களாக உயர்ந்தமையால், சமூகத்தில் பெருமாற்றங்கள் ஏற்படக் காரணமாயின.

### டொகுகாவா காலத்தில் சாமுராயங்களின் நிலை

- டொகுகாவாக்களின் மையப்படுத்தப்பட்ட ஆட்சி அதிகாரத்துடன் பொருளாதார வளர்ச்சியும் ஒன்றிணைந்தமையால், யுத்த நடவடிக்கைகளில் முக்கியத்துவம் வகித்த சாமுராயங்களின் நிலைமை கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டது.
- ஷோகுன்களினால் நாட்டிலுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட்டமையால், சாமுராய்களுக்குத் தமது தொழில் தொடர்பான பயிற்சிகளைக் கூடப் பெற இயலவில்லை.
- இக்காலத்தில் வெளிநாட்டு யுத்தங்கள் எதுவும் இடம் பெறாமையால் சாமுராய்கள் முன்வருவதற்கான எச்சந்தர்ப்பமும் கிட்டாமல் போனது.
- இந்நிலையில் சாமுராய்கள் கௌரவமான மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியாக மாறினர்.
- இவர்கள் டொகுகாவாக்களால் பெரும்பாலும் நிர்வாக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டனர்.

இதனால் முன்பு சமூகத்தில் முன்னணியில் திகழ்ந்த சாமுராய்கள், புதிய முறையினால் டைமியோக்களின் கீழ் பணியாளர்களாக மாறுகையில்

சமூக அமைப்பின் அடிமட்டத்தில் இருந்த வர்த்தகர்கள், பணத்தை சம்பாதித்துக் கொண்டு, முழுப் பொருளாதாரத்தின் மீதும் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்களாக மாறினர். வேகமாக முன்னேறும் நகர சமூகத்தில் மத்தியதர வர்கத்தினராக இவர்களே திகழ்ந்தனர்.

## விவசாயிகளின் நிலை

ஷோகுன் ஆட்சியின் போது விவசாயிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள் என்றே இதுவரை வரலாற்றியலாளர்கள் நம்பினர். ஆனால் விவசாயிகளின் உழைப்பு மேல்வகுப்பு அதிகாரிகளுக்கு அத்தியாவசிய-மாயிருந்தது என்பது பரிசீலனைகளிலிருந்து தெரிய வந்தது. என்றாலும் விவசாயிகள் துன்பப்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்தது. விவசாயத் தொழில் நாட்டின் தன்னிறைவுக்குக் காரணமான ஒன்றாயிருந்தது. ஆயுதந்தரித்தல் அவர்களுக்குத் தடுக்கப்பட்டிருந்தமையால் இராணுவ சேவையிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். டொகுகாவா, இயாஷு ஆட்சிகளுக்குப் பின்னால் தொடர்ந்தும் சமாதான காலமே நிலவியது.

## விவசாய, கைத்தொழில் வளர்ச்சி

- இதற்கு முன்னைய காலங்களில் காணப்படாத அளவுக்கு ஷோகுன்களின் கீழ் விவசாயம் வளர்ச்சியடைந்தது. விளைவிக்கப்பட்ட நிலத்தின் அளவு இரு மடங்கானது.
- புதிய பயிர்கள் அறிமுகம் செய்யப்பட்டன.
- பசளையிடல், இயந்திரசாதனங்களைப் பயன்படுத்தல் என்பவற்றால் விளைச்சல் துரிதமாகப் பெருகியது.
- விவசாயம் போன்றே கைத்தொழிலும் கிராமிய மட்டத்தில் வளர்ச்சியுற்றது.
- பட்டு, பருத்தி, உப்பு, புகையிலை, சீனி என்பன கிராமிய மட்டத்தில் வளர்ச்சியடைந்த கைத்தொழில்களாக விளங்கின.

## டொகுகாவா ஷோகுன் ஆட்சி முடிவு பெறல்

1867 ஆம் ஆண்டில் ஷோகுன் ஆட்சி முடிவுற்றது. அக்கால கட்டத்தில் ஜப்பானில் புரட்சிகரமான மாற்றங்கள் பல நிகழ்ந்தன. டொகுகாவா ஷோகுன் காலத்து வரலாற்று முக்கியத்துவத்தை மதிப்பிடுவது ஓரளவுக்குக் கஷ்டமானதாகும். உள்நாட்டளவில் பார்க்கும் போது ஷோகுன் ஆட்சியில் சம்பிரதாயங்கள் தீவிரமாகக் கைக்கொள்ளப்பட்டன. இவ்வாட்சியின் முக்கியமான பண்பாக ஜப்பானின் பெரும்பகுதி ஷோகுன்களின் ஓரே ஆட்சி முறைக்குள் கொண்டுவரப்பட்டதைக் குறிப்பிடலாம். அதேபோன்று இந்நிர்வாகக் காலத்தில் நீண்டகால அமைதி நிலவியமையும் பாதுகாப்புக் காணப்பட்டமையும் விசேட பண்புகளாகும். சமூகம் வகுப்புவாரியாகப் பிரிந்திருந்தாலும் அது அவ்வளவு தூரம் இறுக்கமான அமைப்பாக இருக்கவில்லை. பெருமளவில் சமூக சமத்துவம்

காணப்பட்டது. தொடர்பாடல் வியூகம் விரிவடைந்திருந்தது. கல்வி விரைவான மாற்றத்திற்குட்பட்டது. எழுத்தறிவு வீதம் ஆண்களினது 45% ஆகவும், பெண்களினது 15% ஆகவும் காணப்பட்டன.

ஜப்பான் நவீன அரசொன்றாகப் பரிணாமம் அடைவதற்கான அத்திவாரம் டொகுகாவா, ஷோகுன் காலத்திலேயே இடப்பட்டது. சில வரலாற்றியலாளர்கள் ஷோகுன்களின் காலத்தைப் "பொற்காலமாகக்" கருதுகின்றனர்.

## நவீன அரசொன்றாக மாற்றமுறல்

ஜப்பானியர்களின் தனிப்பட்ட கொள்கை 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தே ஷோகுன்களால் கவனமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கத்திய நாடுகள் கீழைத்தேய நாடுகளில் தமது வர்த்தக நடவடிக்கைகளைப் பெருக்கிக் கொண்டிருந்த காலகட்டம் இதுவாகும். 19ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதி வரை ஜப்பானின் கதவுகளை வர்த்தகத்திற்காக திறந்துகொள்வதற்கு ஐரோப்பியர்கள் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வி கண்டன. கடைசியாக இவ்விடயத்தில் ஐக்கிய அமெரிக்கா தலையிட்டது. ஐக்கிய அமெரிக்கா இக்காலமளவில் கீழைநாட்டு வர்த்தகத்தில் கணிசமான பகுதியைத் தமதாக்கிக் கொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. 1800 இல் ஐக்கிய அமெரிக்க கப்பல்கள் ஜப்பானியக் கடலினூடாக சீனாவுக்குப் பயணங்களை மேற்கொண்டன. நீராவியால் இயங்கும் கப்பல்கள் புழக்கத்திற்கு வந்த பின்னர், எரிபொருள், நீர், உணவு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக துறைமுகங்கள் அவசியமாயின.

### மேற்கு நாடுகளுடனான வர்த்தகத் தொடர்பு

1853 ஜூலை மாதம் கொமாண்டர் பியரியின் கடற்படை டோக்கியோ குடாவுக்குள் வந்தது. ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் பியரிக்கு பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கும்படி பணித்திருந்தது.

1. பழுதடைந்திருந்த ஐக்கிய அமெரிக்க கப்பல்களையும், மாலுமிகளையும் பாதுகாத்தல்
2. வர்த்தகக் கப்பல்களுக்கு எரிபொருள், நீர், உணவு என்பவற்றை வழங்குதல்
3. கப்பல்களைப் பழுதுபார்த்தல்.
4. வர்த்தக நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குதல்.

இக்கோரிக்கைகள் ஜப்பானிய அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டபோது ஐக்கிய அமெரிக்க வர்த்தக ஆணையாளர் ஹெரிஸ் டவுன்ட்சென் விஜயம் செய்யும் வரையும் எவ்வித மாற்றங்களும் இடம் பெறவில்லை. டவுண்ட்சென் தந்திரமான முறையில் ஆட்சியாளர்களிடம் கீழ்வரும் கருத்துக்களை முன்வைத்தார் :

- சீனா, ஐரோப்பியர்களுக்கு வியாபாரத்திற்கு அனுமதி வழங்காமையால் பிரித்தானியாவும் வேறு சில நாடுகளும் அதனை ஆக்கிரமிக்க நேர்ந்தமை.
- சீனாவில் அமைதி அற்றுப் போனமை.
- வியாபாரத்திற்கு அனுமதி கிடைத்தால், வர்த்தக நடவடிக்கைகளை சமாதானமான முறையில் மேற்கொள்ளக்கூடியதாயிருக்கும்.

ஹெரிஸ் டவுண்செண்ட், 1858இல் ஜப்பானுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தால், சில துறைமுகங்களில் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் பின்னர் இவ்விரு நாடுகளுக்கிடையே ராஜதந்திரத் தொடர்பு ஏற்பட்டது.

ஜப்பானின் கதவுகள், வெளி உலகத்திற்குத் திறக்கப்பட்ட பின்னர் முதலில் ஏற்பட்ட விளைவு ஷோகுன்களின் ஆட்சி இல்லாமற் போனதாகும். அரசின் நவீன கோட்பாடுகளின் மீது, மீளவும் சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமாகும் என்றபடியால் ஷோகுன்களின் ஆட்சி இல்லாமல் போனதை முக்கியமான வரலாற்றுச் சம்பவமாகக் கருதலாம். நான்கு தளபதிகளின் கீழ் இப்பிரதேசங்கள் ஆட்சி செய்யப்பட்டன. சொஷூ, சத்சும, ஹிசென், தொஸ என்போர் இப்பிரதேசங்களின் தலைவர்களாவர். டொகுகாவா யுகம் முற்றுப் பெறுவதை இவ்வீரர்கள் (சமுராய்) பொறுமையிழந்து பார்த்துக் கொண்டிருந்தனர். இக்ஷோதோவில் இருந்த பேரரசர் உண்மையான ஆட்சியாளராக வேண்டும் என்று அவர்கள் கூறிக்கொண்டிருந்தனர். அவர்கள் ஐரோப்பியர்களை மிலேச்சர்களாகக் கருதினர். ஐரோப்பியர்களை ஜப்பானிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என அவர்கள் கூறிக்கொண்டிருந்தனர். இதற்குப் பழிதீர்க்கும் வகையில் 1863 இல் சத்சும சாமுராயின் வீரர்களால் ஆங்கிலேயர் ஒருவர் கொல்லப்பட்டார். பிரித்தானியக் கடற்படை சத்சுமவின் தலைநகரத்தை குண்டு வீசித்தாக்கியது. சில தினங்களுக்குப் பின்னர் பிரித்தானிய, பிரான்ஸிய, ஒல்லாந்த, ஐக்கிய அமெரிக்க கடற்படைகள் ஷிமோனோஸெக் எனும் இடத்தில் கடற்படை ஒத்திகை ஒன்றை நடத்தின. இதன்படி மிகவும் குறுகிய காலத்தினுள் பிரதான ஆட்சிப் பிரதேசங்கள் நான்கினதும் ஆட்சியாளர்கள் வெளிநாட்டார் மீது கொண்டிருந்த அபிப்பிராயங்களை மாற்றிக் கொண்டனர்.

## மெய்ஜி சீர்திருத்தம்

1867 இல் ஷோகுன்கள் தமது அதிகாரங்கள் அனைத்தையும் பேரரசரிடம் ஒப்படைத்தனர். படைத்தளபதிப் பதவியை இவர்கள் நாடிய போதும் அதுவும் கிடைக்கவில்லை. 700 ஆண்டுகளாக ஜப்பானை ஆட்சி செய்த டொகுகாவா வம்சத்தினா் முற்றாக அகற்றப்பட்டனர். பேரரசரின் ஆட்சி மையம் இக்யோதோவில் இருந்து டோக்கியோவுக்கு இடமாற்றப்பட்டது. இச்செயற்பாடுகளே மெய்ஜி சீர்திருத்தம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

மெய்ஜி சீர்திருத்தம் இடம்பெறும் போது ஜப்பானியப் பேரரசராக இருந்த முட்சுஹிதோ பதினைந்தே வயதான சிறுவனாக இருந்தார். ஜப்பானிய அமைப்புகள். மீள மாற்றியமைக்கப்பட்ட போது அவர் காட்டிய ஆர்வம் வியக்கத்தக்கதாகும். அவரின் ஆட்சிக் காலம் (1868 - 1912) ''மெய்ஜி'' - ''ஒளிமயமானது'' எனக் குறிப்பிடப்படுகிறது. 1871 இல் பேரரசரால் மானியமுறை ஒழிக்கப்பட்டது. ஜப்பானின் முன்னேற்றத்திற்கு மானிய முறை தடையாக உள்ளதென அவர் கருதினார்.

ஜப்பானை சக்திவாய்ந்த நாடொன்றாகக் கட்டியெழுப்புவதற்கு சுயநலமற்ற ஆசை இருக்குமாயின், மானியமுறை அமைப்புகளால் எவ்வித பயனுமில்லை என்பதை உணா்ந்து அதற்குப் பதிலாக துரிதமாக நவீனமயப்படும் நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும் என உணரப்பட்டது. வர்த்தகப் பொருளாதாரமொன்றை நோக்கிப் பயணப்படுகையில் மானியமுறை அமைப்புகள் பெருந் தடைகளாக அமைவது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அரசியல், சமூக, பொருளாதார, அறிவு சார்ந்த துறைகளில் மெய்ஜி காலத்தில் ஏற்பட்ட துரித அபிவிருத்தி, புரட்சி ஒன்றுக்கு சமமானதாகும். இச்சீர்திருத்தம் பெரும் கோஷங்களாலோ சமூகத்தின் கீழ்மட்டத்திலிருந்து எழுந்த புரட்சி ஒன்றாலோ நிகழ்ந்ததல்ல. இதனை நிர்வகித்தவர்கள் உயர் தலைவர்களாவர். டொகுகாவா காலத்தில் நாட்டை ஒன்றுபடுத்தியது கடுமையான நடவடிக்கைகள் மூலமேயாகும். இவ்வாறே மெய்ஜி சீர்திருத்த காலகட்டத்திலும் பொது மக்கள் தமது தலைவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக பொறுமையுடன், ஜப்பான் நவீன அரசொன்றாக மாறுவதனை அவதானித்துக் கொண்டிருந்தனர்.

மெய்ஜி தலைவர்கள் அதிகாரத்தைக் கையேற்றதன் பின்னர் மேற்கு நாடுகளின் அரசியல் திட்டவளர்ச்சி பற்றி ஆழமான ஆய்வுகளில் ஈடுபட்டனர். அவ்வாய்வுகளின் முடிவில், ஜப்பானிலும் அரசியல் யாப்புக்கு உட்பட்ட அரசொன்றை உருவாக்க வேண்டும் எனத் தலைவர்கள் தீர்மானித்தனர். அதன் பின்னர் அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குவதற்கான காலத்தைக் குறித்து அறிவித்தல் ஒன்றை வெளியிட்டனர். தெரிவு செய்யப்பட்ட குழு ஒன்றினால் உருவாக்கப்பட்ட யாப்பு 1889 இல் பேரரசரால் பிரகடனப்படுத்தப்பட்டது. இது 1871 - ஜேர்மனிய பேரரசின் அரசியல் யாப்பை ஒத்திருந்தது.

## புதிய அரசியல் யாப்பு

''டயட்'' எனப்படும் இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது. பிரபுக்கள் சபை, பிரதிநிதிகள் சபை என்பன இவ்விரண்டுமாகும். பிரதிநிதிகள் சபைக்கு சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்பட்டது. நிதி சார்ந்த விடயங்களில் இச்சபைக்கு ஓரளவுக்கே அதிகாரம் இருந்தது. அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயங்கள் யாப்பில் குறிப்பிடப்பட்டிருந்தன. வாக்குரிமை நிலச்சுவாந்தர்களுக்கும் பணக்காரர்களுக்கும் மட்டுமே இருந்தது. அவர்கள் மொத்த குடித்தொகையில் ஒரு வீதத்தினர் மட்டுமேயாவர். பேரரசர் முப்படைகளினதும் தலைவராவார். வெளிநாட்டு விவகாரம் அவரது பொறுப்பிலேயே இருந்தது. பாராளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டமூலமொன்று அவரது அங்கீகாரத்தின் பின்னரே நடைமுறைப்படுத்தப்படும். அமைச்சரவை மன்னருக்கன்றி பாராளுமன்றத்திற்குப் பொறுப்புச் சொல்லவேண்டியதில்லை. காலாட்படையினதும், கடற்படையினதும் பொறுப்பான அமைச்சர்கள் நேரடியாகப் பேரரசருடன் தொடர்புகளை வைத்திருந்தனர்.

ஜப்பானிய அரசியல் யாப்பின் சிறப்புப் பண்பாக, புராதன ஜப்பானிய பண்பாட்டு விடயங்கள் பலவும் அதனுள் அடங்கி இருப்பதைக் குறிப்பிடலாம். இவை கொன்பியூஸியஸின் தத்துவங்களுடன் தொடர்புடையவையாகும். அவை பின்வருமாறு

- ❖ மனிதன் இயற்கையிலேயே அசமநிலையானவன். தாழ்ந்த மனிதன் உயர்ந்த மனிதனுக்குக் கட்டுப்பட வேண்டும்.
- ❖ சட்டத்தின் மூலம் நடத்தப்படும் ஆட்சியைவிட, மனிதர்களால் மேற்கொள்ளப்படும் ஆட்சி சிறந்ததாகும்.
- ❖ தனிமனிதர்களைவிட சமூகம் முக்கியமானது.
- ❖ அரசுக்கு முக்கியத்துவமானது தந்தை வழிச் சமூகமாகும்.

## அரசியல் கட்சிகள்

அரசியல் யாப்புச் சட்டத்தின் படி பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக தேர்தல் கட்சி அடிப்படையில் நடத்தப்படும். 1881 இல் லிபரல் (தாராண்மைவாதக்) கட்சி முதலாவதாகத் தோற்றுவிக்கப்பட்டது. அது தொஸ பிரதேசத்தைச் சேர்ந்த இத்தகி சமுராய் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. 1882 இல் ஹிசென் பிரதேச கவுன்டாவாக இருந்த ஒகுமா என்பவரால் முற்போக்குக்கட்சி ஆரம்பிக்கப்பட்டது. பிரதிநிதித்துவ ஆட்சி முறையைப் பலப்படுத்துவதற்காக அரசியல் கட்சிகள் அவசியமானவையாகும். ஜப்பானிய அரசியல் கட்சிகள் தனி நபர்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததன்றி, கொள்கைகள் மீது கட்டியெழுப்பப்பட்டவையல்ல. அவை நெடுங்காலத்திற்கு நிலைத்திருக்கவுமில்லை.

ஜப்பானில் யாப்புக்கு அமைவான அரசாங்கமொன்றை உருவாக்கிக் கொண்டபின்னர், பலம்வாய்ந்த தரைப்படையையும். கடற்படையையும் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தினர். பிரித்தானிய முறைப்படி கடற்படையையும், ஜேர்மனிய முறைப்படி தரைப்படையையும் உருவாக்குவதே அவர்களின் நோக்கமாயிருந்தது.

## பொருளாதாரக் கொள்கை

மெய்ஜி காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றம், அரசியல் வளர்ச்சியைவிட ஆச்சரியமளிப்பதாய் இருந்தது. டொகுகாவா யுகத்தில் விவசாயத்தை முதன்மையாகக் கொண்டிருந்த ஜப்பான், மெய்ஜி யுகத்தில் வியாபாரத்தை முதன்மையாகக் கொண்டதாக மாறியது. முதலாளித்துவப் பொருளாதாரமுறை வளர்ச்சியுற்றது. புதிய ஆட்சியாளர்கள் கைத்தொழில் மயத்தில் கூடிய கவனஞ் செலுத்தினர். நவீன தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு தொலைத்தொடர்பு வலையமைப்பொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். புகையிரதப் பாதைகள், தந்தித் தொடர்புகள், தொலைபேசி, கப்பல், பாரிய இயந்திர சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதில் அரசாங்கம் கவனஞ் செலுத்தியது. இவற்றில் தனியார் துறையும் ஈடுபடத் தொடங்கியது. புகையிரதப் பாதைகள், தொலைத் தொடர்பு, தேசிய பாதுகாப்பு என்பன அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்பட்டன.

நீங்கள் "மிட்சுய்" சிமெந்து, 'மிட்சுபிஸி' மோட்டார் வண்டிகள் பற்றி அறிந்திருப்பீர்கள். இத்தாபனங்கள் இரண்டும் மெய்ஜி காலகட்டத்தில் சமுராய்களினால் ஆரம்பிக்கப்பட்டவையாகும். மிட்சுய் தாபனம் மிஸ்ட்ரை என்பவராலும் மிட்சுபிஷி தாபனம் சத்சுமா சமுராயுடன் சம்பந்தப்பட்டவர்களாலும் ஆரம்பிக்கப்பட்டவைகளாகும்.

19ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலும் ஐரோப்பாவில் ஏற்பட்ட கைத்தொழில் வளர்ச்சி மேற்கத்தைய நாடுகளைவிடப் பல்வேறு வழிகளிலும் வேறுபட்டதாகும். உற்பத்தி எவ்வளவு வேகமாக இடம் பெற்றது என்பதற்கு, ஒரு பரம்பரையினுள் (20 வயது) பொருட்கள் கூடியளவு மிகைப்படும் வண்ணம் உற்பத்தியை மேற்கொள்ள அவர்களால் முடிந்ததிலிருந்து விளங்கிக் கொள்ளலாம். மேற்கத்தைய நாடுகளின் தொழில்நுட்பத்தை இறக்குமதி செய்து கைத்தொழில்புரட்சியை மேற்கொண்டமை அவதானிக்கத்தக்க பண்பாகும்.

ஜப்பானின் கைத்தொழில் முன்னேற்றத்தின் விசேட பண்பாக உற்பத்தி அளவு வேகமாக முன்னெடுக்கப்பட்டாலும், தொழிற்சாலைகள் பலவும் அளவில் சிறியனவாகவே காணப்பட்டன. பாரிய தொழிற்சாலைகள் குறைந்த அளவிலே காணப்பட்டன. 1930 ஆம் ஆண்டளவில் ஜப்பானின் தொழிலாளர் தொகை ஆறு மில்லியனாகும். அவர்களுள் முக்கால் பங்கினரும் நூறு பேருக்குக்

குறைவாக உழைக்கும் ஆலைகளிலேயே தொழில் செய்தனர். சில தொழிற்சாலைகளில் ஐந்து தொழிலாளர்களே காணப்பட்டனர்.

## ஆதிக்கப் பரம்பல் - கொரியாவில் சீன - ஜப்பான் யுத்தம்

கிழக்கு ஆசியாவில் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதே ஜப்பானின் எண்ணமாகவிருந்தது. 1876 இல் கொரியாவின் தனிமைப் பண்பை ஜப்பான் முடித்து வைத்தது. ஷோகுன் காலத்தில் கொரியா வெளியுலகுடன் தொடர்பு கொள்வது தடுக்கப்பட்டது. கொரியாவின் தனிமையைப் போக்குவதற்குத் தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தின்படி கொரியா சுதந்திர அரசாகும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது. இங்கு சீனா, 'மஞ்சு' வம்ச ஆட்சிக்காலத்திலிருந்தே அது தனது பிரதேசம் என்று கூறிக்கொண்டிருந்தது. 'மஞ்சு' அதிகாரிகள் இது தொடர்பாக எதனையும் கூறாதிருந்தது, ஜப்பானுடன் போர் செய்ய நேருமே என்பதனாலாகும். இப்போது போர் ஒன்றிற்கான சூழ்நிலை உருவாகி வந்தது. கொரியா ஆசியாவிலேயே ஏழை இராச்சியமொன்றாகும். நிர்வாகமோ ஊழல் மலிந்ததாகும். கவனியாது விடப்பட்டமையால் விவசாயிகள் பரிதாபத்திற்குரி-யோராய் இருந்தனர். ஜப்பான் வர்த்தக, இராணுவ நடவடிக்கைகளின் முக்கியத்துவம் கருதியே கொரியாமீது கவனம் செலுத்தியது. கொரியாவுக்கு வடக்காகக் காணப்பட்ட பசுபிக் சமுத்திரக் கரையோரப் பிரதேசத்தை ரஷ்யா கைப்பற்றிக் கொண்டிருந்தது. கொரியாவில் இடம் பெற்ற கலவரம் ஒன்றை அடக்கும் தோரணையில் ஜப்பானும் சீனாவும், கொரியாவுக்குள் பிரவேசித்தன. இவ்வாறு ஜப்பானிய - சீன யுத்தம் ஆரம்பமானது.

1895 இல் ஜப்பானால் சீனா தோற்கடிக்கப்பட்டது. ஆசியாவில் நிலப்பரப்புக்களைக் கைப்பற்றிக் கொள்வதே ஜப்பானின் நோக்கமாக இருந்தது. கொரியாவின் சுதந்திரத்தை சீனா அங்கீகரிப்பதோடு, தனது போருக்கான செலவையும் தர வேண்டும் என்றும், போர்மோஸா, பெஸ்கதோர் தீவுகள், மஞ்சூரியாவின் தென் பகுதி மீது சீனா உரிமை பாராட்டுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் ஜப்பான் நிபந்தனைகளை விதித்தது.

## ரஷ்யா - யப்பான் யுத்தம்

ரஷ்யா கொரியாவைத் தாக்கியதற்கு எதிர்விளைவாக 1904 இல் ரஷ்யாவை ஜப்பான் தாக்கியது. கடற்படையையும் தரைப்படையையும் தோல்வியுறச் செய்த ஜப்பான், ரஷ்யாவுக்குச் சொந்தமாக இருந்த சகலின் தீவின் தென் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது. இது நிலப்பரப்பின் அடிப்படையில் சிறியதோர் பிரதேசமாக இருந்தாலும் இதன் மூலம் ஜப்பான் பிரபல்யமான நாடாக மாறியது. சீன - ஜப்பானிய யுத்தத்தின் பின்னர் ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகள் ஒன்றுபட்டு மஞ்சூரியாவில் இருந்து ஜப்பான் வெளியேற வேண்டும் என்று கோரிக்கைவிட்டன.

ஜப்பான் மஞ்சூரியாவிலிருந்து வெளியேறியவுடன் சீனா, ரஷ்யாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு மஞ்சூரியா ஜப்பானுக்குச் சொந்தமானதல்ல என்று குறிப்பிட்டு ரஷ்யாவிடம் அதன் பாதுகாப்புப் பொறுப்பை ஒப்படைத்தது. பிரயோக அடிப்படையில் பார்க்கும் போது, மஞ்சூரியாவின் தென்பகுதிக்கு மட்டுமல்ல, முழு மஞ்சூரியாவுக்குமே ரஷ்யாவின் செல்வாக்கு விரிவடைந்தது. கொரியா, மஞ்சூரியா விடயங்களில் ஏதாவது உடன்பாடொன்றைச் செய்து கொள்ள ஜப்பான் எவ்வளவு முயன்றும் சார் அரசரின் பிள்ளைகளின் கவளயீனம் காரணமாக அது சாத்தியப்படவில்லை. ரஷ்யாவுடன் யுத்தமொன்றுக்குச் செல்வது அபாயகரமானது என்று ஜப்பான் தெரிந்து வைத்திருந்தாலும், அப்போது அது பிரித்தானியாவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டிருந்தமையால், உலகின் சக்தி வாய்ந்த கடற்படையின் உதவி அதற்குக் கிட்டியது.

ஜப்பான் - ரஷ்ய யுத்தத்தில் பெரிய பிரித்தானியாவும், ஐக்கிய அமெரிக்காவும் ஜப்பானுக்குச் சார்பாக இருந்தமையால், ரஷ்யா தோல்விய-டைந்தது. ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்டின் வழிகாட்டுதலில் நியு ஹம்ஷயரில் போர்ட்ஸ் மவுத் துறைமுகத்தில் வைத்துச் செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்துடன் யுத்தம் முடிவடைந்தது. ரஷ்யாவில் போல்ஷேவிக்குகளின் எழுச்சிக்கு இத்தோல்வி வழிவகுத்தது.

ஜப்பானிய - ரஷ்யப் போரின் பின்னர், ஜப்பான் இழந்த தனது யுத்த சக்தியை மீளக் கட்டியெழுப்புவதில் கவனஞ் செலுத்தியது. இதற்கிடையில் ராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதிலும் கவனஞ் செலுத்தியது. 1907 இல் ரஷ்யாவுடன் செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தத்தின் மூலம் மஞ்சூரியாவை இரண்டுபடுத்தி அதனைக் கைப்பற்றிக் கொள்ள முயற்சித்தது. 1910 இல் ஜப்பான் கொரியாவை ஆக்கிரமித்துக் கொண்டது.

## இரண்டாம் உலகமகா யுத்தக் காலத்தில் ஜப்பான்

1914 இல் முதலாம் உலக யுத்தம் ஆரம்பமான பின்னர் ஜப்பானுக்குத் தனது பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் வாய்த்தது. சீனாவில் ஜேர்மனுக்குச் சொந்தமான பிரதேசங்கள், பசுபிக் தீவுகள் என்பன ஜப்பானால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன. இதற்கு மேலாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு ஆயுத உபகரணங்களை விற்பதன் மூலம் பெருந்தொகைப் பணத்தை ஈட்டிக் கொள்ள முடிந்ததனால், ஜப்பானின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சி அடைந்தது.

முதலாம் உலகப் போரின்போது ரஷ்யாவில் (1917) புரட்சி ஏற்பட்டு, மாக்ஸிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. அவ்வரசாங்கம் போரில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டது. இச்சந்தர்ப்பத்தில் அங்கு சிக்கிக் கொண்ட செக்கோஸ்லோவாக்கிய படைகளை மீட்க, போரின் முடிவில் நேசநாடுகளின் படைகள் அனுப்பப்பட்டன. இதில் ஜப்பானியப் படைகளும்

ஈடுபடுத்தப்பட்டன. படையெடுப்பினால் ஜப்பானுக்கு எந்தவொரு நன்மையும் விளையவில்லை. ஜப்பான் இராணுவத்தின் புகழ் கீழே சரிந்தது. உலகப் பெரும் போரின் முடிவில் மேற்கொள்ளப்பட்ட உலக சமாதானத்தால் மார்ஷல், மரியானா, கெரோலினா தீவுகள் ஜப்பானுக்குக் கிடைக்கப்பெற்றன.

1922 - 1930 காலகட்டத்தில் ஜப்பான் தனது கவனத்தை உள்நாட்டு விடயங்களில் மட்டுமே செலுத்தியது. ரஷ்யாவில் ஏற்பட்ட இராணுவ அபகீர்த்தியைப் போக்கிக்கொள்ளும் வண்ணம் அதனைக் கட்டியெழுப்புவதில் முதலில் கவனத்தைச் செலுத்தியது. ஜப்பானின் குடித்தொகைப் பெருக்கம் அதிகளவில் காணப்பட்டமை பெரும் பிரச்சினையாக இருந்தது. உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குப் பெருமளவு பணத்தைச் செலவிடவேண்டி ஏற்பட்டது. ஏற்றுமதி வருமானத்தின் பெரும் பகுதியை இதற்காகச் செலவிட வேண்டி நேர்ந்தது. அதிகமான ஐரோப்பிய நாடுகள், ஜப்பானிய உற்பத்திகளின் மீது அதிக தீர்வை விதித்தமை ஜப்பானின் மீது விழுந்த அடியாகக் காணப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் ஆசிய சந்தைகளைக் கைவிட்டமையால் அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஜப்பானால் முடியுமாயிருந்தது.

1939 இல் ஏற்பட்ட இரண்டாம் உலக மகாயுத்தத்தில் ஜப்பான் அச்சு நாடுகளான ஜேர்மன், இத்தாலியுடன் இணைந்து நேச நாடுகளுக்கு எதிராகப் போரிட்டது. ஜப்பான் மஞ்சூரியாவை ஆக்கிரமித்ததை ஐக்கிய அமெரிக்கா கண்டித்தது. அத்தோடு, ஜப்பானுடனான வர்த்தகத்தையும் கட்டுப்படுத்தியது. சில வகைப் பொருட்களை ஜப்பானுக்கு விற்பதையும் அது தவிர்த்துக் கொண்டது. ஜப்பான் சீனாவிலிருந்தும் இந்தோசீனாவிலிருந்தும் வெளியேற வேண்டும் எனவும் கோரியது. ஐக்கிய அமெரிக்காவின் ஜப்பானிய எதிர்ப்புக் கொள்கையால், பசுபிக் சமுத்திரத்திலிருந்த ஐக்கிய அமெரிக்க காவல் நிலையங்களைத் தாக்க ஜப்பான் திட்டமிடுவதாகவும் ஐக்கிய அமெரிக்க உளவுச் சேவை எச்சரிக்கை விடுத்திருந்தது.

1941 டிசம்பர் 7 ஆம் திகதி ஜப்பானிய யுத்த விமானங்கள் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கி, கப்பல்கள் ஐந்தை மூழ்கடித்து, நூற்றைம்பது போர் விமானங்களையும் அழித்தொழித்தது. இரண்டாம் உலகப் போரில் பிரவேசித்த ஜப்பான் முதல் மூன்று மாதங்களில் வியக்கத்தக்க வெற்றிகள் பலவற்றைப் பெற்றிருந்தது. ஐக்கிய அமெரிக்காவின் குவாம் படைமுகாம், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், என்பவற்றைக் கைப்பற்றிக் கொண்டு பசுபிக் சமுத்திரத்தில் நிலை கொண்டிருந்த பிரின்ஸ் ஒப் வேல்ஸ், ரிபல்ட் எனும் இரண்டு யுத்தக் கப்பல்களையும் சிங்கப்பூரின் அருகே மூழ்கடித்தது. அடுத்து பிரித்தானியாவுக்கும் ஒல்லாந்துக்கும் சொந்தமான பசுபிக் தீவுகளைக் கைப்பற்றி அவுஸ்திரேலியாவைத் தாக்குவதற்கு ஆயத்தமானது. ஐக்கிய அமெரிக்காவின் கப்பற்படை கொரல் கடலின் அருகே மேற்கொண்ட சண்டையினாலே ஜப்பான் தொடர்ச்சியாகப் பெற்றுவந்த வெற்றிகளைத் தடுக்கமுடிந்தது.

ஜேர்மனியினதும் இத்தாலியினதும் தோல்வி நிச்சயம் என்ற நிலையில், ஜப்பானை நிபந்தனையின்றி சரணடையுமாறும் இல்லையேல் பேரழிவை எதிர்கொள்ள நேரும் என்றும் ஐக்கிய அமெரிக்கா எச்சரிக்கை விடுத்தது. ஜப்பானோ அதைப் பொருட்படுத்தவில்லை.

ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஹெரி ட்ரூமனும், பிரித்தானியப் பிரதமர் கிளமென் அட்லியும் பொட்ஸ்டேம் நகரில் கூடி எடுத்த முடிவின் படி, புதிதாகக் கண்டறியப்பட்ட அணு குண்டுகள் 1945 ஒகஸ்ட் 6 ஆம் திகதி ஹிரோஷிமா நகர்மீதும், 9 ஆம் திகதி நாகஷாகி நகர்மீதும் வீசப்பட்டன. இதனால் ஒருலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இறந்ததுடன் இரு நகரங்களும் மோசமாகச் சிதறடிக்கப்பட்டன. 1945 செப்டெம்பர் மாதம் 2ஆந் திகதி ஜப்பான் நிபந்தனையின்றி சரணடைந்தது.

இரண்டாம் உலகப் பெரும்போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவி வழங்குவதற்காக 'மார்ஷல் திட்டம்' எனும் ஒன்றைச் செயற்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்கா நடவடிக்கை எடுத்தது. இத்திட்டம் ஜோர்ஜ் மார்ஷல் என்பவரால் வடிவமைக்கப்பட்டதாகும். பொருளாதார ரீதியாகப் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்ட நாடுகள் கம்யூனிஸ செல்வாக்கிற்கு உட்படுவதைத் தடுப்பதற்காகவே இத்திட்டம் உருவாக்கப்பட்டது. யுத்தத்தில் அழிந்தொழிந்த ஜப்பானுக்கும் இதன்கீழ் உதவி வழங்கப்பட்டது. ஜப்பானை பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாக சன்பிரான்ஸ்சிஸ்கோ நகரில் நடைபெற்ற மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்துக்கொண்டவர் திரு.ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்களாவார். அச்சமயம் அன்னார் ''வைராக்கியத்தால் வெல்ல முடியாது'' எனும் புத்தபெருமானின் போதனையை முன்வைத்து உரையாற்றியதன் மூலம் ஜப்பானுக்கு மன்னிப்பு வழங்குவதற்கு ஏனைய நாடுகளின் இணக்கத்தைப் பெற்றுக்கொண்டார். அன்று முதல் ஜப்பான் இலங்கையின் நல்ல நண்பனாக மாறியதுடன் நன்றிக் கடனுக்காக எமது நாட்டுக்கு நிறைய உதவிகளையும் புரிந்து வருகின்றது.

யுத்தத்தால் அழிவுண்ட ஜப்பான் கடந்த 60 ஆண்டுகளினுள் அனைத்துத் துறைகளிலும் அடையப்பெற்ற முன்னேற்றம் ஆச்சரியந் தருவதாகும். அவற்றை ஐந்தாம் அத்தியாயத்தில் கற்றுக் கொள்வோம்.

செயற்பாடு:

1. ஜப்பானின் புவியியல் தன்மைகளைக் காட்டும் புறவுருவப் படம் ஒன்று வரைக
2. ஜப்பானின் இன்றைய முன்னேற்றத்தைக் காண்பிக்கும் படங்களைச் சேகரிக்கவும்.
3 ஜப்பான் நவீன அரசொன்றாக எழுச்சியடைவதற்கு டொகுகாவா ஆட்சியாளர்களால் ஆற்றப்பட்ட சேவைகளை விளக்குக.
4 மெய்ஜி சீர்த்திருத்தத்தின் போது செயற்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு எவ்வாறானது?

## சீனா

இந்தியாவினதும் ஜப்பானினதும் வரலாற்றைக் கற்ற நீங்கள் அடுத்து சீன வரலாற்றின் முக்கியமான கட்டம் பற்றிக் கற்கப் போகிறீர்கள்.

> "நாடுகளுக்குச் சுதந்திரம் தேவை இனங்களுக்கு விடுதலை தேவை. மக்களுக்குப் புரட்சி அவசியம்"
>
> - முன்னால் பிரதமர் சூ-என்-லாய்

### சீனாவில் தேசியவாதமும், கொமியூனிசவாதமும்.

நீண்ட காலம் இடம்பெற்ற அரசியல் போராட்டங்களின் பின்னர் 1911 இல் மன்-சூ அரசவம்சம் அதிகாரத்தை இழந்தமையானது, சீன அரசியல் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். சீனாவின் மரபுகள், கலாசாரம் முதலியவற்றில் என்றுமில்லாத துரித மாற்றங்கள் ஏற்பட்டன. ஒன்றன்பின் ஒன்றாக ஏற்பட்ட சம்பவங்களின் அடிப்படையில் சீனப் புரட்சியை 4 கட்டங்களாக அவதானிக்கலாம்.

01. யுவாங் - ஷி - காயியின் கூட்டாட்சிக் காலம் (1912 - 1916)
02. போர்த் தலைவர்களின் நிர்வாகமும் மத்திய அரசு பலவீனமடைதலும் (1916 - 1922)
03. தேசியவாதப் புரட்சி (1923-1949)
04. கொமியூனிசப் புரட்சி (1949)

1. மன் - சூ அரச வம்சம் பதவியிறக்கம் செய்யப்பட்ட பின்னர் சீனக் கூட்டாட்சியின் முதலாவது ஜனாதிபதியான யுவாங் - ஷி - காயி மீண்டும் மன்னராட்சி முறையை உருவாக்குவதற்குரிய முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பயனளிக்கவில்லை. அத்துடன் அரசின் ஒருமைத் தன்மையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும் அது பெருந்தடையாக விளங்கியது. 1916 இல் யுவாங் - ஷி - காயி காலமானதைத் தொடர்ந்து போர்த் தலைவர்களின் அதிகாரம் மேலோங்கியது. (WAR LORDS.)

2. பீகிங் நகரைச் சூழவுள்ள பிரதேசங்களில் கூட்டாட்சி முறையொன்று செயற்படுத்தப்பட்ட போதிலும் ஏனைய பிரதேசங்களில் படைத்தலைவர்கள் அதிகாரம் பெற்றனர் போர்த் தலைவர்களில் சிலர் மன்-சூ அரச வம்சத்தில் சேவையாற்றிய அதிகாரிகளாகவும், இன்னும் சிலர் இராணுவத்தில் கடமையாற்றிய தளபதிகளாகவும் போர் வீரர்களாகவும் காணப்பட்டனர். இவர்கள் கொள்ளைக் கூட்டத்தினர் போன்றே செயற்பட்டனர். இப்போர்த் தலைவர்கள் சீனாவின் பல பகுதிகளையும் ஆட்சி செய்தனர். மனிதாபிமானமற்ற முறையில் பொது மக்களை நசுக்கி அதிக வரிகளை அறவிட்டதுடன் கொடூரமான ஆட்சி முறையொன்றையே அமுல்படுத்தினர். எனவே சீனப் பொது மக்கள் மிகவும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

3. முதலாம் உலக மகா யுத்தம் நடைபெறும் காலத்தில் சீனா உள்நாட்டுக் குழப்பம் நிறைந்த நாடாக விளங்கியது. இச்சந்தர்ப்பத்தில் நட்பு நாடுகளுக்கு ஆதரவு தருவதாகக் கூறிய சீனா ஜேர்மனிக்கு எதிராக யுத்தப்பிரகடனம் செய்தது. சீனக் கூட்டாட்சியாளர்கள் சமாதான உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதன் மூலம் உள்நாட்டுக் குழப்ப நிலையை முடிவுக்குக்கொண்டு வரலாம் என எதிர்பார்த்தனர். முதலாம் உலகப் போரின் முடிவில் பரிஸ் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட மாநாட்டில் சீனா முன்வைத்த ஆலோசனை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது.

4. கலாநிதி சுன் - யத் - சென் அவர்களின் கோமிங்டான் கட்சியின் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட 1912 காலகட்டம் புரட்சிச் செயற்பாடுகளின் மூன்றாவது கட்டமாக அமைந்தது. கலாநிதி சுன் - யத் - சென்னின் கோமிங்டாங் ஆதரவாளர்கள் பாராளுமன்ற ஆட்சி முறையொன்றை நோக்கிச் செல்வதையே இலக்காகக் கொண்டிருந்தனர். பீகிங் மற்றும் சில பிரதேசங்களில் இடம் பெற்ற போர்த் தலைவர்களின் ஆட்சியை காரசாரமாக விமர்சித்த சுன் - யத் - சென் அவர்களின் கோமிங்டாங் கட்சி மிகவும் சிறியதொரு கட்சியாகும். இக் கட்சி அது விமர்சித்த போர்த் தலைவர்களின் உதவியிலேயே தங்கியிருந்தது. அத்துடன் சீனாவின் கூட்டாட்சி, பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு உதவாத, யதார்த்தத்துக்கு அப்பாற்பட்ட ஒன்றாகக் காணப்பட்டது. பொறுப்பற்ற போர்த் தலைவர்களின் ஆட்சியினால்


கலாநிதி சுன்-யத் -சென்

சீனாவின் அதிகமான பிரதேசங்கள் சீரழிந்து காணப்பட்டன. ஆயினும் கோமிங்டாங்கின் அரசாங்கத்தின் போக்கு ஒரேயடியாக மாற்றமுற்றதுடன் மென்மையான ஆட்சிக் காலமொன்று உருவானது. இம்மாற்றத்துக்கான காரணம் அக்கட்சிக்குக் கிடைத்த ரஷ்யாவின் உதவியாகும்.

ரஷ்யாவில் 1917 இல் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய போல்ஸ்விக் கட்சிக்குத் தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உலக வல்லரசுகளின் உதவி தேவைப்பட்டது. கென்டனில் அதிகாரத்தை நிலைநாட்டியிருந்த கலாநிதி சுன் - யத் - சென்னுடைய உதவியை ரஷ்யா நாடியது. கோமிங்டாங் கட்சித் தலைவர் கொமியுனிசவாதத்தை ஏற்றுக் கொள்ளாமைக்குக் காரணம் மேற்கு நாடுகளின் உதவியைப் பெற்றுக் கொள்வதாகும். மேற்குலக நாடுகளின் உதவியைப் போலவே சுன் - யத் - சென் ரஷ்யாவின் உதவியையும் பெற்றுக் கொண்டார். 1923 இல் ரஷ்யப் பிரதிநிதிகள் சீனாவுக்கு வருகை தந்ததுடன் சீனாவுக்கு உதவியளிப்பதற்கும் உடன்பட்டனர். அன்றைய சீனாவின் உடனடித் தேவையாகக் காணப்பட்டது, தேசிய ரீதியாக ஐக்கியப்படுதலும் சர்வதேச வல்லரசுகளிடமிருந்து சீனாவைப் பாதுகாத்துக் கொள்வதுமாகும். இதன் பொருட்டு ரஷ்யாவின் இராணுவ, அரசியல் ஆலோசகர்கள் கென்டனுக்கு வருகை தந்தனர்.

1923 - 1927 காலப்பகுதியில் சீனாவின் தேசிய இயக்கத்துக்கு சிறப்பானதொரு தலைமைத்துவம் கிடைத்தது. அத்துடன் தெளிவான நோக்கங்களும் தேவையான மக்கட் பலமும் அதனிடம் காணப்பட்டன. இராணுவக் குழுக்களின் ஆட்சி பலவீனமடைந்திருந்ததுடன் மக்கள் இவ்வாட்சி முறையை வெறுத்திருந்தனர். சுன் - யத் சென்னின் நடவடிக்கைகள் சீன மக்களிடையே தேசப்பற்றையும் இன உணர்வையும் வளர்ச்சியடையச் செய்திருந்தன.

யாங்சி பள்ளத்தாக்கில் தொழிற்சாலைகளை மையமாகக் கொண்டு தொழிலாளர் அமைப்புக்கள், தொழிற் சங்க நடவடிக்கைகள், விவசாயிகள் இயக்கங்கள், இளைஞர் இயக்கங்கள், பெண்கள் விடுதலை அமைப்புக்கள் என்பன வளர்ச்சியடைந்தன. கொமியூனிசத்துக்கு எதிரான கொள்கையுடையவர்கள், சீனாவில் தேசிய அரசொன்றைக் கட்டியெழுப்பி அதனை அரசியல், பொருளாதார ரீதியில் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். சோவியத் ரஷ்யாவின் ஆலோசகர்கள் சுன் - யத் - சென் மற்றும் அவரின் ஆதரவாளர்களுக்கும் சிறப்பான தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தனர். கோமிங்டாங் கட்சி ரஷ்யாவின் கொமியூனிசக் கட்சியைப் போல கட்டியெழுப்பப்பட வேண்டும் என்று மைக்கல் பொரோடின் எனும் ரஷ்ய ஆலோசகர் கூறினார். எனவே கோமிங்டாங் கட்சியின் பிரசார நடவடிக்கைகளின் போது கீழ்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது.

- ❖ இராணுவ ஆட்சியை இல்லாதொழித்தல்.
- ❖ ஜனநாயகவாத, நேர்மையான அரசியல் வாதிகளை நியமனஞ் செய்தல்.
- ❖ ஆயுத பாவனையைக் கைவிடல்.

தமது நோக்கங்களை சுவரொட்டிகள், சித்திரங்கள், ஆர்ப்பாட்டங்கள் மூலம் மக்கள் மத்தியில் பரப்பினர்.

1925 அளவில் கென்டன் அரசு சிறியதானாலும் பிரபலமானதாக விளங்கியது. இங்கு வரி அறவிடல், வர்த்தக நடவடிக்கைகள், என்பவற்றுடன் நவீன இராணுவ அமைப்பொன்று உருவாக்கப்பட்டதுடன் அதற்கு மேற்கு நாடுகளின் இராணுவத் தலைவர்களின் கீழ் பயிற்சியும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. கென்டன் அரசு கொமியுனிசம் அல்லாத ஒரு சோவியத் ரஷ்ய முறையாகத் தன்னைப் பிரபல்யப்படுத்திக்கொண்ட போதிலும் அநேகமான நாடுகள் சீனாவின் அரசாங்கமாக அதனை அங்கீகரிக்கவில்லை. சோவியத் ரஷ்யா 1924 இல் பீகிங் அரசாங்கத்தை அங்கீகரித்திருந்த போதிலும் பீகிங் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு சுன் - யத் - சென்னுக்கு உதவி வழங்கியது. தனது செயற்பாடுகளின் விளைவுகளைக் காண்பதற்கு சுன் - யாத் - சென் உயிருடன் இருக்கவில்லையாயினும், அவரது நோக்கங்கள் கட்சியின் மரபாக நிலைத்து நின்றது. கலாநிதி சுன் - யத் - சென்னுடைய எழுத்தாக்கங்களை கோமிங்டாங் கொமியூனிஸ்ட் கட்சி தனது பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டது. அவரது தத்துவங்கள் “சுன் - மின் - சு” எனும் பெயரில் வெளியிடப்பட்டதுடன் அது கோமிங்டாங் கட்சியின் வேத நூலாகக் கருதப்பட்டது.

**கோமிங்டான் கட்சியின் அடிப்படைக் கொள்கைகள் மூன்றும் வருமாறு :**

தேசிய வாதம்
தேசியவாதம் என்பது சீனாவை வெளிநாட்டு சக்திகளிடமிருந்து சுதந்திரம் பெறச் செய்தல், மக்கள் அரசாங்கத்துக்கு உறுதுணையாக இருத்தல் என்பதாகும்.

ஜனநாயகம்
பிரபலமான இம்முறையினால் மக்கள் இறைமையுடனான பிரதிநிதித்துவ ஆட்சி முறையொன்றை தொடர்தல்.

உழைப்பு
இதனால் எதிர்ப்பார்க்கப்பட்டது என்னவெனில் பெனதிக வளங்களின் வளர்ச்சியுடன் சமூகத்தை மாற்றியமைக்கலாம். மாக்சியத்தை நிராகரித்த சுன்- யத்- சென் இவ்விடத்தில் பயனுள்ள வேலைத்திட்டமொன்றை முன்வைக்க தவறியுள்ளார்.

கலாநிதி சுன்- யத் - சென்னுடைய கருத்துப்படி புரட்சிகரமான சந்தர்ப்பங்கள் மூன்றாகும்.

1. யுத்த சந்தர்ப்பம் :-
   நாட்டின் சட்டத்தை நிலை நாட்டுவதற்காக அதிகாரத்தைப் பிரயோகித்தல்.
2. பொறுப்பேற்கும் சந்தர்ப்பம் :-
   மக்களுக்குப் பயிற்சி அளித்தல், புரட்சித் தலைமைக்கு கௌரவமளித்தல்.
3. யாப்பொன்றை உருவாக்கும் சந்தர்ப்பம் :-
   பிரதிநிதித்துவ ஆட்சி முறைக்கான அரசியல் யாப்பினைத் தயாரித்தல்.

தலைமைத்துவத்திலும், கொள்கை ரீதியிலும் கலாநிதி சுன் - யத்-சென்னிடம் குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் அவர் ''புரட்சியின் தந்தை'' என அழைக்கப்பட்டார். அவர் மரணித்த 1924ஆம் ஆண்டில் வட சீனாவில் போர்த் தலைவர்கள் மூவரிடையே ஏற்பட்டிருந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அங்கு சென்றிருந்தார். அச்சந்தர்ப்பத்தில் அவரின் உடல் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அவருடைய கொள்கைகள் அவர் நினையாத அளவுக்கு செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன. அவருடைய ஆதரவாளர்கள் மத்தியில் அவர் ஒரு வீரபுருஷராக விளங்கினார். உலகம் முழுவதுமிருந்த சீனர்கள் கூட்டாட்சி யாப்பின் மூலம் புதிய அரசாங்கம் ஒன்று உருவாகும் நன்னாளை எதிர்பார்த்த வண்ணமிருந்தனர். சீனாவில் காணப்பட்ட பழைய கருத்துக்களைப் புதிய விஞ்ஞானக் கருத்துக்களுடன் கலந்து நவீன அரசியல் சிந்தனையொன்றை உருவாக்குதல் கலாநிதி சுன் - யத் - சென்னுடைய நோக்கமாக இருந்தது.

1926ஆம் ஆண்டாகும் போது கென்டன் அரசாங்கம் வடசீனாவில் ஆட்சியிலிருந்த இராணுவத் தலைவர்களுக்கு சவால் விடுமளவிற்கு சக்தி பெற்றுத் திகழ்ந்தது. தேசியவாதம் புரட்சியொன்றுக்கான மட்டம் வரை வளர்ந்தது. கோமின்டாங் அணியினருக்குத் தலைமைத்துவம் வழங்குவதற்கு சியங்காய் ஷெக் எனும் இளவயது ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டார். இவர் முதன்முதலில் யங்ஸி பள்ளத்தாக்கில் இராணுவத் தலைவர்களைத் தோல்வியடையச் செய்தார். அதன்பின்னர் நடாத்திய தொடர் தாக்குதல்களால் பல மாகாணங்களினதும் அதிகாரம் மக்கள் மயப்படுத்தப்பட்டது. இத்தொடர் தாக்குதல் ''தண்டனை வழங்கும் செயற்பாடு'' எனும் பெயரால் அழைக்கப்பட்டது.

கோமின்டாங்கட்சியின் மரபு வழிக் கொள்கை உடையவர்கள் கொமியூனிச விரோதிகளாகக் காணப்பட்டதுடன், கொமியூனிசவாதிகளைத் தமது கட்சியிலிருந்து துரத்திவிடுவதையே அவர்கள் நோக்கமாகக் கொண்டிருந்தனர், ஆனால் கொமியூனிசவாதிகள் விவசாயிகளையும். தொழிலாளர்களையும், இணைத்துக் கொண்டு கட்சியைப் பலமடையச் செய்யும் நோக்கில் இருந்தனர். இதற்கிடையில் ஷங்காய் நகரில் ஊர்வலமாகச் சென்ற கொமியூனிச ஆதரவாளர்கள் மீது சியங்காய் ஷேக்குடைய படையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய காரணத்தால் சிலர்

இறக்க நேரிட்டது. சீனாவின் அரசியல் நிலைமை முழுவதுமாக மாற்றமடைந்தது. மைக்கல் பொரோடின் முதலிய சோவியத் ஆலோசகர்கள் நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். குடியரசுவாதிகள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். மேலும் பல கட்சியின் அங்கத்தவர்கள் ரஷ்யாவுக்குச் சென்று அடைக்கலம் கோரினர்.

கோமின்டாங் கட்சியிலிருந்த குடியரசுவாதிகளை நீக்கிய பின்னர் சியெங் - காய் - ஷெக் சீனா முழுவதும் தனது அதிகாரத்தைப் பரப்புவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். அன்றிலிருந்து அவர் கட்சியின் தன்னிகரில்லாத் தலைவராக விளங்கினார். மரபு ரீதியான கொள்கையுடையவர்கள் கோமிங்டாங் கட்சிக்குத் தமது ஆதரவை வழங்கினர். சியங் - காய் - சேக்கின் மனைவியான சுன் - யத் - லின் என்பவர் சுன் - யத் - சன்னின் சகோதரியாவார். அவர் அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்றவராவார். இராணுவத் தலைவர்களின் ஆட்சிப் பிரதேசங்களுக்கூடாகத் தமது படைகளை நகர்த்திய கோமின்டாங் கட்சியினர் சிரமமில்லாமல் 1928 இல் பீகிங் நகரைக் கைப்பற்றிக் கொண்டனர். சியங் - காய் - சேக்கின் படையினர் நென்கின் நகரைக் கைப்பற்றி அதனைத் தமது தலை நகராக்கிக் கொண்டனர்.

கோமின்டாங் அணியினரால் நாட்டின் பல பாகங்கள் கைப்பற்றப்பட்டாலும் தொடர்ந்தும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வது சிரமமானது என்பதை சியங் - காய் - செக் உணர்ந்தார். தேசியத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பாரிய பொறுப்பில் இருந்த இவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னிருந்த நிலை அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு மாற்றமுற்றது. இன்னும் சீனாவில் இராணுவ ஆட்சியின் எச்சங்களைக் காணக்கூடியதாக இருந்தது. கோமின்டாங் கட்சியின் அதிகாரமும் இராணுவ பலத்திலேயே தங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கோமிங்டாங் தேசியவாதிகள் நாங்கிங் நகரில் அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொண்டு சிறப்பான சில சேவைகளை மேற்கொண்டனர். 18 ஆம் நூற்றாண்டின் பின்னர் சீனாவின் பெரும்பகுதியை ஐக்கியப்படுத்திய ஆட்சியதிகாரத்தைக் கொண்டு நடத்துவதற்கு சியங் - காய் - செக்கினால் மாத்திரமே முடிந்தது. அதனால் சீனாவின் புகழ் எங்கும் பரவியதுடன் தேசியவாதிகளை சர்வதேசம் ஏற்றுக் கொண்டதுடன் பல நாடுகளுடன் வெளிநாட்டுத் தூதுவராலய உறவுகளையும் ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. ஐக்கிய அமெரிக்கா, சீனா மீது விதித்திருந்த வர்த்தகத் தடையை விலக்கிக் கொள்ள முடிவு செய்தது.

20 வருடங்களாக ஆட்சியதிகாரத்திலிருந்த தேசியவாதிகளான கோமின்டாங் கட்சி வீழ்ச்சியடைந்தது. இதற்கு 3 காரணிகள் செல்வாக்குச் செலுத்தின. அவையாவன :

01. சீன சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முடியாமற் போனமை.

02. சீனாவின் கொமியூனிசவாதிகளின் கடுமையான எதிர்ப்பு

03. 1937 இல் ஜப்பான் சீனாவை ஆக்கிரமித்தமை.

## மா ஓ சேதுங்கின் தலைமையில் கம்யூனிஸ்டுக்களின் எழுச்சி

கோமின்டாங் கட்சி அதிகாரத்திலிருந்த போது கொமியூனிசவாதிகளை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இவ்விரு கட்சியினருக்கு மிடையில் கருத்து மோதல்கள் தீவிரமடையும் சந்தர்ப்பங்களில் கொமியூனிச வாதிகள் தலைமறைவாகினர். கிராமப்புறங்களிலும், நகரப்புறங்களிலும் குறிப்பாக மத்திய சீனாவிலும் தென் சீனாவிலும் தமது நடவடிக்கைகளை கொமியூனிச வாதிகள் இலகுவாகத் தொடர்ந்தனர். அது மாத்திரமல்லாது தேசிய வாதிகளின் ஆட்சிக்கு எதிராக சோவியத் ரஷ்யா போன்ற ஓர் அரசாங்கத்தை கியங்சி மாகாணத்தில் கொமியூனிசவாதிகள் உருவாக்கினர்.

தொடர்ந்தும் கோமின்டாங் கட்சியினர் கொமியூனிச மத்திய நிலையங்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். எனவே தமது உயிரைப் பணயம் வைத்து அவர்களுக்கு எதிராகப் போராட வேண்டிய நிலை கொமியூனிச வாதிகளுக்கு ஏற்பட்டது. எனவே அவர்கள் வறுமைக்கும் துன்பத்துக்கும் ஆளான விவசாயிகளுக்கு கெரில்லா முறையிலான போர்ப்பயிற்சியை அளித்தனர். அது மாத்திரமல்லாது அரசியல் ரீதியாகவும் விவசாயிகளை அணி திரளச் செய்யும் நடவடிக்கைகளையும் கொமியூனிசவாதிகள் மேற்கொண்டனர். இந் நடவடிக்கைகளின் பின்னணியில் நின்று செயற்பட்டவர் மா - ஓ - சேதுங் ஆவார்.

மா - ஓ - சேதுங் மத்திய தரத்திலான விவசாயக் குடும்பம் ஒன்றில் பிறந்தவராவார். இவர் இளம் பராயந்தொட்டே நிலச் சுவாந்தர்களுக்கும் அரச வம்சங்களின் மோசமான ஆட்சியாளர்களுக்கும் எதிராக செயற்பட்டவராவார். 1921 இல் சீன கொமியூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்த ஒரு சிலருள் மா - ஓ - சேதுங்கும் ஒருவராவார். அவர் படிப்படியாக கட்சியின் மத்திய நிர்வாகக் குழுவில் ஓர் அங்கத்தவரானார்.



மா - ஓ - சேதுங்
படம் 1.10

**அவரின் செயற்றிட்டத்தில் பின்வரும் விடயங்கள் காணப்பட்டன.**

01. கிராம மட்டத்தில் கூட்டுறவு முறையை ஆரம்பித்தல்
02. கொடூரமான பிரபுத்துவ வகுப்பினரைப் பயமுறுத்தலும் அவர்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளுதலும்.

சீனப் புரட்சிக்கான பின்னணி உருவாகும் போது மா - ஓ - சேதுங்கின் எழுத்துக்களில் காணப்பட்ட கருத்துக்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

- “புரட்சி என்பது மக்களை இரவு விருந்தொன்றுக்கு அழைக்கும் செயல் அல்ல”.
- “கிராமியப் புரட்சி என்பது மானிய நிலங்களின் உரிமையாளர்களான பணம் படைத்த வகுப்பினரிடம் காணப்படும் ஆட்சியதிகாரத்தைக் கவிழ்த்து விடும் செயற்பாடாகும்”.
- “இலட்சக் கணக்கானோர் புரட்சியிலீடுபடும் போது அது ஒரு புயலாகவோ சூறாவளியாகவோ மாறலாம்”.
- “சீனாவில் வெற்றிகரமான புரட்சியாளர்கள் விவசாயிகளே”.

இங்கு இறுதியில் குறிப்பிடப்பட்ட கருத்தை சோவியத் ரஷ்யத் தலைவர்கள் விரும்பவில்லை. ரஷ்யாவில் தொழிற்சாலை ஊழியர்களே புரட்சியை ஏற்படுத்தினர். என்றாலும் ரஷ்யாவைப் போல் சீனாவில் பலம் வாய்ந்த தொழிலாளர் வகுப்பினர் காணப்படவில்லை என்பதை மா - ஓ - சேதுங் சுட்டிக்காட்டினார்.

## நீண்ட நடைப்பயணம் (பாத யாத்திரை)

சியங் - காய் - செக்குடைய பலம் வாய்ந்த படை தொடர்ந்தும் கொமியூனிஸ்ட் கட்சியினருக்கு இடைஞ்சல் விளைவித்தமையால் மா - ஓ - சேதுங் மிக நீண்ட நடைப் பயணம் ஒன்றை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். 1934 ஒக்டோபர் மாதம் கியங்ஸி நகரில் ஆரம்பித்த இப்பாத யாத்திரை 1935 ஒக்டோபர் மாதம் கொமியூனிஸ்ட் கட்சியின் மத்திய நிலையம் அமைந்திருந்த யெனான் நகரில் முடிவுற்றது. இந் நடைப்பயணம் 6000 மைல்கள் கொண்டதாய் அமைந்ததுடன் பயணத்தின் ஆரம்பத்தில் 90,000 பேர் கலந்து கொண்டபோதிலும் முடிவில் 20,000 பேரே எஞ்சியிருந்தனர். இவர்களே சிறந்த கொமியூனிச வாதிகள் என்பதை அளவிடுவதற்கு வேறு அளவுகோல் தேவையிருக்கவில்லை. அது மாத்திரமல்லாமல் மனதைரியம், அர்ப்பணிப்பு, முதலிய குணாம்சங்களையுடைய சிறந்த கொமியூனிச வாதிகளாக இவர்களைக் குறிப்பிடமுடியும். இப்பாத யாத்திரை மூலம் மா - ஓ - சேதுங் சீன கொமியூனிஸ்ட் கட்சியின் தன்னிகரில்லாத தலைவரானார். மேலும் பாதயாத்திரையின் முடிவில் கொமியூனிஸ்ட் கட்சிக்குப் பாரிய மக்கள் ஆதரவு கிடைத்தது. ஆயினும் பிரதான நகரங்களும் பொருளாதார வளங்களும் எதிரிகளின் கைகளிலேயே காணப்பட்டன.

சிறிது காலஞ் செல்ல வடமேல் சீன மாநிலம் சுயாதீனமான கொமியுனிச மாநிலமாக மாறியது. அங்கு அரசியல், கட்டமைப்பு மற்றும் இராணுவ அலகு என்பன கொமியூனிச அடிப்படையில் ஒழுங்கமைந்து செயற்பட்டபோது பொது மக்கள் அதன்பால் ஈர்க்கப்பட்டனர்.

கொமியூனிஸ்ட் கட்சி விவசாயிகளின் காணிப் பிரச்சினையை விரைவில் தீர்க்கும் முகமாக விசாலமான அளவில் நிலங்களைத் துண்டுகளாகப் பிரித்து அவற்றைக் காணியற்ற விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்தது. மேலும் வரிச்

சுமைகளையும் குறைத்தது. மக்களுக்குக் காணிகளைப் பிரித்து வழங்குவதற்காக காணி வங்கி ஒன்றையும் நிறுவியது. அத்துடன் நீர்ப்பாசனத் திட்டங்கள், கூட்டுறவுமுறை அபிவிருத்தி, நவீன பயிர்ச் செய்கை முறை, பயிர்களைப் பாதுகாக்கும் முறைகள் என்பவற்றையும் விவசாயிகளுக்கு அறிமுகம் செய்தது.

இக்கால கட்டத்தில் ஜப்பான் சீனாவை ஆக்கிரமித்த காரணத்தால் கொமியூனிசவாதிகளுக்கு கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டது. கொமியூனிச வாதிகளைப் போலவே கோமின்டாங் கட்சியினதும் பொது எதிரியாக ஜப்பான் விளங்கியது. இதனைப் பயன்படுத்தி இவ்விரு கட்சிகளையும் ஐக்கியப்படுத்துவதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன.

1939 ஆம் ஆண்டு இரண்டாம் உலக மகாயுத்தம் ஆரம்பமானது. அதற்கு 40 வருடங்களுக்கு முன்பிருந்ததை விட இக்கால கட்டத்தில் சீனா பலம் பொருந்திய நாடாக விளங்கியது. ஜப்பானியர் தமது பாரிய இராணுவத்தின் மூலம் பல நகரங்களையும் கைப்பற்றிக் கொண்டனர். ஜப்பானியப் படைகளால் சீனா முழுவதையும் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை. ஐக்கிய அமெரிக்கா ஜப்பானுக்கு எதிராகப் போரில் பங்கெடுத்த காரணத்தால் சீனாவுக்கு யுத்த உதவிகளை வழங்கியது.

ஜப்பானிய யுத்தம் முடிவடையும் போது தேசியவாதிகள் சில நகரங்களில் மாத்திரம் அமெரிக்காவின் உதவியுடன் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டனர். கொமியூனிசவாதிகள் கிராமப் புறங்களில் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டனர். ஜப்பானியப் படைகளின் அதிகளவான ஆயுதங்கள் கொமியூனிசவாதிகளின் கைவசமானது ஜப்பானியப் படைகள் தோல்வியடைந்து சரணடைந்ததைத் தொடர்ந்து சீனாவின் உள்நாட்டுப் பிரச்சினை ஒரு சிவில் யுத்தமாக மாறியது.

கொமியூனிஸ்ட் கட்சிக்கும் தேசியவாதக் கட்சிக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தில் தேசியவாதக் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டனர். எனவே சியங் - காய் - செக் தனது உதவியாளர்களுடன் தாய்வானுக்குத் தப்பியோடி அங்கே தனது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொண்டார்.

> பயிற்சி
> கோமின்டாங்களுக்கும் கொம்யூனிஸவாதிகளுக்கும் இடையில் நிலவிய கருத்து வேறுபாடுகளை விளக்குக.

### கொம்யூனிஸ ஆட்சி

தேசியவாதிகளின் படை தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து கொமியூனிஸ்ட் கட்சி சீனாவின் பாரிய நிலப்பரப்பில் தமது ஆட்சியதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டது. 1949 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சீன மக்கள் கூட்டாட்சி ஆரம்பிக்கப்பட்டதுடன் சீனாவின்

தலைநகர் பீகிங் (பீஜிங்) என்றும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. 1954 ஆம் ஆண்டு மக்கள் சீனாவின் அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு இது சோவியத் ரஷ்யாவின் யாப்பை ஒத்ததாகக் காணப்பட்டது. கொம்யூனிசக் கொள்கைகளுக்கு ஏற்றதாக உருவாக்கப்பட்ட ''அகில சீன மக்கள் காங்கிரஸ்'' எனும் மத்திய நிருவாக அமைப்பிடம் அதிகாரங்கள் குவிந்து காணப்பட்டன. தனிநபர் சுதந்திரம், ஆண் பெண் சமத்துவம், 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு வாக்குரிமை, சொத்துரிமை என்பன வழங்கப்பட்டன.

❖ கொமியூனிஸ்ட் கட்சி அதிகாரத்துக்கு வந்த பின்னர் பொருளாதார, சமூக, கலாசார மாற்றங்கள் பலவும் செயற்படுத்தப்பட்டன. கொமியூனிசப் புரட்சி சீன வரலாற்றின் மிக முக்கியமான கட்டமாகும். கார்ல்மாக்ஸின் அரசியல் கோட்பாடுகளை அவர் சீனாவின் மரபுகளுக்கேற்ப அணுகி முடிவுகண்ட பின்னர் தனது நோக்கங்களை அடையும் வகையில் அவற்றை செயற்படுத்தினார். அச் செயற்பாடுகளின் போது நெகிழ்ச்சித் தன்மையுடன் செயற்பட்டதுடன் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் போது நடைமுறைக்குச் சாத்தியமானதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் அமையும் வகையில் செயற்பட்டார். சீனாவின் சிரேஷ்ட வரலாற்று மரபுரிமைகளை மதித்த மா - ஓ - சேதுங் ''வெற்றியடைந்த புரட்சி மரபு'' களையும் பாதுகாத்துக் கொண்டார். சுன் - யத் - சென் மேல் மதிப்பு வைத்திருந்த மா - ஓ - சேதுங் அவரின் விதவை மனைவியின் சகோதரி ஒருவரை மக்கள் சீனக் கூட்டாட்சி அரசாங்கத்தின் உபதலைவராக நியமித்தார்.

❖ மா - ஓ - சேதுங் மார்க்ஸின் மக்கள் கிளர்ச்சி பற்றிய கருத்தை ஏற்றுக் கொண்டதுடன் 19 ஆம் நூற்றாண்டில் சீனாவில் இடம் பெற்ற தைப்பிங் விவசாயிகளின் கிளர்ச்சி ஏன் தோல்வியடைந்தது என்பது பற்றிய ஆய்வுகளையும் மேற்கொண்டார். உலகில் விவசாயிகளின் உதவியுடன் பாரிய புரட்சியொன்றை மேற்கொண்ட முதல் நபர் மா - ஓ - சேதுங் ஆவார்.

❖ விவசாயிகளின் மத்தியில் தோன்றிய விவசாயிகளின் தலைவனான அவரால் வெற்றிகரமான ஒரு புரட்சியை நோக்கி விவசாயிகளை வழி நடத்த முடிந்தது. இது லெனின், ஸ்டாலின் ஆகியோரின் கோட்பாடுகளுடன் பொருந்தவில்லை. சீனாவின் சமூக அமைப்பு ரஷ்யாவின் சமூக அமைப்பை விட வித்தியாச மானதாகக் காணப்பட்டது.

❖ சீனாவின் கொமியூனிச ஆட்சியின் வெற்றிக்காக விவசாயிகள், தொழிலாளிகள், சிறு அளவில் பணம் படைத்தோர், மத்திய வகுப்பினர் என்று சகல தரப்பினரது உதவியையும் மா - ஓ - சேதுங் பெற்றுக் கொண்டார். பணக்காரர்களினதும் மத்திய வகுப்பினரினதும் உதவியைப் பெற்றுக் கொள்வது மாக்ஸியவாதத்துக்குப் புறம்பான செயலாகும். ஆயினும் அவ்விரு வகுப்பாரிடையே காணப்பட்ட பொருளாதார பலம், கைத்தொழில் அறிவு என்பவற்றைப் புறக்கணித்து பொருளாதார வளர்ச்சியைக் காண முடியாது என்பதை மா - ஓ - சேதுங் நன்கு விளங்கியிருந்தார்.

❖ உற்பத்தியாளர்களுக்கும் மத்திய வகுப்பினருக்கும் தாம் விரும்பும் பட்சத்தில் புதிய அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற முடிந்தது. அதற்காக அவர்களின் சொத்துக்களை தற்காலிகமாக அரசாங்கத்திடம் ஒப்படைத்தல் அவசியமாகும். இவ்வாறு இணைந்து பணியாற்றுபவர்கள் மிகத்தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டார்கள். 1956 இல் மத்திய வகுப்பினரின் உரிமை ஒழிக்கப்பட்டது. மா - ஓ - சேதுங் உள்ளிட்ட மத்திய நிர்வாகக் குழு அரசாங்கக் கொள்கைகளை வகுத்ததுடன் அரச இயந்திரத்தை இயக்கும் திறவுகோல் மா - ஓ சேதுங் வசமானது. இங்கு ஜனநாயகத் தன்மை வாய்ந்த கட்டளை பிறப்பிக்கும் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது.

## முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்

1949க்குப் பின்னர் சீனாவின் பின்னடைவு படிப்படியாக மறைந்து போனது கைத்தொழிற்றுறையுடன் விவசாயத் துறையிலும் சீனா துரித வளர்ச்சி கண்டது. விவசாயத்துடன் இணைந்த வாழ்க்கையை மேற்கொண்ட சமூகமும் மாற்றங்களுக்குட்பட்டது. இதனால் நிலச் சுவாந்தர்களின் நில உரிமை இல்லாமலாக்கப்பட்டது. இதனை எதிர்த்த நில உரிமையாளர்கள் கொல்லப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. நில உரிமையாளர்களான புதிய விவசாய சமூகம் கூட்டுறவு அடிப்படையில் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என அரசாங்கம் கேட்டுக் கொண்டது. இம்முறையானது 1955 - 1957 காலப்பகுதியில் துரித வேகத்துடன் முன்னேற்றம் கண்டது. 90% விளைச்சல் கூட்டுறவு அடிப்படையில் ஒன்று திரட்டப்பட்டது. சீன விவசாயிகள் சொந்த விருப்பின் பேரில் கூட்டுறவுத் துறையில் இணைந்து செயற்பட்டனர்.

1959 ஆம் ஆண்டு விவசாயத்துறையில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக ''முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்'' எனும் வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் ஒன்றிணைக்கப்பட்டு பாரிய கொமியூன் அமைப்புகள் உருவாக்கப்பட்டன. விவசாயப் பண்ணைகள் ஒரு கொமியூனுக்கு மாத்திரமன்றி முழு சீன சமூகத்தினதும் சொத்தாகக் கருதப்பட்டது. கொமியூன்கள் அமைக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் விவசாய, கைத்தொழில்துறையில் உற்பத்தியை அதிகரித்து பொருளாதார வளர்ச்சி வேகத்தை அதிகரித்தலாகும். ஆயினும், பல்வேறு காரணங்களால் ''முன்னோக்கிய பெரும்பாய்ச்சல்'' வேலைத்திட்டம் தோல்வியில் முடிவடைந்தது.

''முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்'' தோல்வியடைந்தமையால் மா - ஓ - சேதுங்கின் அரசியல் நிலை சற்றுத் தளர்வடைந்தது. 1959 இல் ஆட்சித் தலைமைப் பதவியைக் கைவிட்ட அவர், கட்சித் தலைமைப் பதவியை வகிப்பதன் ஊடாக கட்சிக்குள் தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ளவும் இராணுவத்தின் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொண்டார். பின்னர் தனது எதிரிகள் தனக்கெதிராகச் செயற்படுவதற்கு சந்தர்ப்பமளிக்காத வகையில் புரட்சியை வேகப்படுத்துவதன் ஊடாக கலாசாரப் புரட்சி ஒன்றை நிகழ்த்துவதற்காக முயற்சி செய்தார்.

## கலாசாரப் புரட்சி

வர்க்கத்தில் கலாசாரப் புரட்சிக்கான பின்னணி மிகவும் சிக்கலானது. சுருக்கமாகச் சொல்வதானால் அது ஆட்சித் துறையின் தலைவரான லியோ - ஷா -ஓ- சி அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய மித வாதிகளுக்கும் மா - ஓ - சேதுங்கைப் பிரதிநிதித்துவப்படுத்திய தீவிரவாதிகளுக்கும் இடையிலான அதிகாரப் போராட்டமாகும்.

1965 கலாசாரப் புரட்சி ஏற்படும் வரை வெளித் தோற்றத்தில் மிகச் சிறந்த இணக்கப்பாட்டுடன் கூடிய அரசாங்கமாகவே சீனா விளங்கியது. கலாசாரப் புரட்சி ஆரம்பமாகும் போது அரசாங்க அதிகாரிகள் பல்வேறு குற்றச் சாட்டுகளின்பேரில் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இன்னும் சிலர் பதவியிறக்கம் செய்யப்பட்டிருந்தனர். இதற்கு கொமியூனிசவாதிகள் முன் வைத்த குற்றச்சாட்டுகளுள் மறுசீரமைப்பு வாதம், கட்சி விரோத செயற்பாடு, முதலாளித்துவப் பாதையிலான பயணம் முதலியன அடங்கும். கலாசாரப் புரட்சியின் முகவர்களான செம்பாதுகாப்புப்படையினருக்கு மக்கள் சீனாவின் ஜனாதிபதியான லியாஓ - ஷாஓ - சீயும் இலக்கானார். மா - ஓ - சேதுங்கின் பின்னர் அப்பதவிக்கு லியாஓவின் பெயரே குறிப்பிடப்பட்டிருந்தது. கலாசாரப் புரட்சிக்குக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பிய போது மா - ஓ இளைஞர்களைத் தன்பக்கம் திருப்பிக் கொண்டார்.

''புரட்சியைக் கற்றுக் கொள்ளுங்கள். புரட்சியை புரட்சி செய்வதன் ஊடாகக் கற்றுக் கொள்ளுங்கள்''. என்று அவர் இளைஞர்களுக்குக் கூறினார். அத்துடன் நாட்டிலுள்ள பாடசாலைகள் அனைத்தையும் மூடிவிட்டு மாணவர்களைக் கொண்டு ''செம்பாதுகாப்புப்படை'' யை உருவாக்கினார். 1966 ஆகஸ்ட் மாதம் பீகிங் நகரில் முதல் ''செம்பாதுகாப்புப்படை'' உருவாக்கப்பட்டது. தமது சக்தியையும் தைரியத்தையும் உச்ச அளவில் பயன்படுத்தி புரட்சியின் எதிரிகளை அழித்தொழிக்குமாறு அவர்களிடம் மா - ஓ கேட்டுக் கொண்டார். ''செம்பாதுகாப்புப் படை''யின் இளைஞர்கள் சீனா முழுவதும் கலாசாரப் புரட்சி எனும் பெயரில் கலகம் விளைவித்தனர்.

நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இப் போராட்டத்தால் நாடு அராஜகத் தன்மைக்கு இட்டுச் செல்லப்பட்டது. முக்கியமான தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள் இடம் பெற்றன. போக்குவரத்துத் துறையும் சிக்கல் நிறைந்ததாக மாறியது. அரசியல் ரீதியாக சீனா உலகில் தனித்து விடப்பட்டது. பொதுவுடைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இடதுசாரி நாடுகள் கூட சீனாவுடன் தூதுவராலயத் தொடர்புகளை வைத்துக் கொள்ளவில்லை. ''செம் பாதுகாப்புப் படை'' யும், ''புரட்சிகர கிளர்ச்சியாளர்'' களும் 1968 இல் சீனாவில் சில இடங்களில் சிவில் யுத்த நிலையொன்றைத் தோற்றுவித்திருந்தனர். எனவே ''மக்கள் விடுதலை இராணுவம்'' மூலம் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு

மா - ஓ - சேதுங் மற்றும் சூ - என் - லாய் இருவரும் நடவடிக்கை எடுத்தனர். அதன் பின்னர் கட்சியிலிருந்த அதிதீவிரவாதக் கொள்கையுடையவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். கலாசாரப் புரட்சியின் முக்கிய ஆயுதமான லின் - பியா - ஓ என்பவர் மா - ஓ - சேதுங்கின் பின்னர் அப்பதவிக்குப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தார். ஆயினும் அவர் கலாசாரப் புரட்சியின் குற்றவாளியாகக் காணப்பட்டார். எனவே அவர் ரஷ்யாவுக்குத் தப்பிச் செல்லும் போது ஏற்பட்ட விமான விபத்துக் காரணமாக உயிரிழந்தார்.

## கலாசாரப் புரட்சியின் பலாபலன்கள்

பல நூற்றாண்டுகளாக அரசியல் உறுதி இல்லாதிருந்த சீன சமூகம் கலாசாரப் புரட்சிக்குப் பின்னர் மாற்றமுற்றது. துரிதகதியில் அதிகரித்துவரும் சனத்தொகையைக் கட்டுப்படுத்த பலவிதமான உதவிப் பணங்களும் வழங்கப்பட்டன. விவசாய, கைத்தொழிற்றுறை வளர்ச்சி அதிகரித்தமையால் மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்தது. பெண்களுக்கும் ஆண்களைப் போல சமவுரிமை கிடைத்தது. நவீன உலகுக்குப் பொருத்தமான முறையில் கல்வித் துறையும் பாரிய மாற்றங்களைக் கண்டது. சீனாவின் அரிச்சுவடி மிகவும் சிக்கலாகக் காணப்பட்ட-மையால் இலகுவான சீன அரிச்சுவடி ஒன்றும் உருவாக்கப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்டிருந்த சீனா, சோவியத் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் முதலிய இன்னும் பல நாடுகளுடன் தூதரகச் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. சகல துறைகளிலும் வளர்ச்சி கண்ட சீனா இன்று உலகில் பலம் வாய்ந்த நாடுகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில், சீனா நிரந்தர உறுப்பு நாடாக விளங்குகின்றமையை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

செயற்பாடு :

1. நீண்ட பாதயாத்திரை சம்பந்தமான படங்களை சேகரிக்கவும்.
2. சீனாவின் புவியியல் அமைப்புகளைக் காட்டும் வரைபடம் ஒன்றை வரையவும்
3. சுன் யத் சென், கோமிங்டாங், சியாங்காய் ஷேக் - மா - ஓ சேதுங், கொம்யூனிஸவாதிகள், கலாசாரப்புரட்சி எனும் தலைப்புகளில் சிறு நூல் ஒன்றை ஆக்குக.
4. சீனப் புரட்சியின் முக்கிய கட்டங்களையும் அதனால் ஏற்படட அரசியல் மாற்றங்களையும் பட்டியல் படுத்துக